நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

வறட்சி: மத்திய நிபுணர் குழு இன்று வருகை



தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட மத்திய நிபுணர் குழு திங்கள்கிழமை (மே 6) சென்னை வருகிறது.

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசுத் துறைகளின் முக்கிய அதிகாரிகளுடன் அந்தக் குழு ஆலோசனை நடத்திய பிறகு செவ்வாய்க்கிழமைமுதல் இரண்டு நாள்களுக்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கள ஆய்வினை நடத்துகிறது.

தமிழகத்தில் வறட்சி பாதித்த மாவட்டங்களுக்கு ரூ.19 ஆயிரத்து 665 கோடி அளவுக்கு நிவாரண நிதி வழங்குவதற்கான கோரிக்கையை மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பிவைத்துள்ளது.

இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் மத்திய நிபுணர் குழு தமிழகத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளது.

10 பேர் அடங்கிய குழு: மத்திய வேளாண்மைத் துறையின் ஓர் அங்கமான சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு என்ற நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான பர்வேஷ் ஷர்மா தலைமையில் மத்தியக் குழு வருகிறது. இந்தக் குழு இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஆய்வுப் பணிகளை நடத்துகிறது.

அதாவது டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் கள ஆய்வு நடத்தப்படுகிறது.

பர்வேஷ் ஷர்மா தலைமையில் ஒரு குழுவும், மத்திய நிபுணர் குழுவில் இடம்பெற்றுள்ள மத்திய திட்டக் குழுவின் துணை ஆலோசகர் (வேளாண் பிரிவு) மானேஷ் சௌத்ரி தலைமையில் மற்றொரு குழுவும் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பர்வேஷ் ஷர்மா தலைமையிலான குழு மதுரையில் முகாமிட்டு ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறது. இந்தக் குழு மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமைமுதல் (மே 7) கள ஆய்வுகளை நடத்துகிறது. இக் குழுவில் மத்திய ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த தீரஜ் ககாடியா, மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை துணை ஆலோசகர் ஜி.பாலசுப்பிரமணியன், மத்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை உதவி ஆணையர் ஹெச்.ஆர்.கன்னா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். குழுவில் இடம்பெற்றுள்ள ஓர் உறுப்பினர் கள ஆய்வுப் பணியின்போது இணைந்து கொள்வார் என வருவாய்த் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருச்சியில் முகாமிடும் இரண்டாவது குழு, திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வினை செவ்வாய்க்கிழமைமுதல் தொடங்குகிறது. மானேஷ் சௌத்ரி தலைமையிலான இந்தக் குழுவில் சென்னையில் உள்ள மத்திய அரசின் புகையிலை மேம்பாட்டுக் கழக இயக்குநர் (பொறுப்பு) கே.மனோகரன், மத்திய அரசின் நிதித் துறை துணை இயக்குநர் (பொறுப்பு) வி.ஸ்ரீகாந்த், மின்சாரத் துறை துணைச் செயலாளர் ஜி.ஜே.ஜோஷ், கோவையில் உள்ள காவிரி மற்றும் தென்னக நதிகள் அமைப்பின் கண்காணிப்புப் பொறியாளர் ஆர்.சுந்தரமூர்த்தி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரண்டு நாள்கள் ஆய்வு: வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பத்து மாவட்டங்களில் மத்திய நிபுணர் குழு இரண்டு நாள்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறது.

இதன்பின் புதன்கிழமை இரவு சென்னை திரும்பும் குழுவினர் முதல்வர் ஜெயலலிதாவுடன் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை (மே 9) காலை 10 மணிக்கு ஆலோசனை நடத்துகின்றனர். அதன்பின் அன்று இரவே தில்லி புறப்பட்டுச் செல்கின்றனர்.

நிவாரணம் எப்படி கிடைக்கும்?

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மத்திய அரசின் நிபுணர் குழு அளிக்கும் பரிந்துரைகள் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும். வறட்சி நிவாரணம் குறித்த கோரிக்கைகளை தமிழக அரசு அளித்த ஓரிரு வாரங்களுக்குள் மத்திய நிபுணர் குழு தமிழகம் வந்து கள ஆய்வுப் பணிகளை நடத்த உள்ளது.

கள ஆய்வுப் பணிகளை முடித்த பிறகு முதல்வர் ஜெயலலிதாவுடன் மத்தியக் குழு வியாழக்கிழமை ஆலோசனை நடத்துகிறது. அப்போது தமிழகத்தின் சார்பிலான கோரிக்கைகளை முதல்வர் முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அதிகாரிகளின் கோரிக்கைகள் மற்றும் கள ஆய்வுப் பணிகளின் அடிப்படையில் மத்திய நிபுணர் குழு தனியாக அறிக்கையைத் தயார் செய்யும்.

இந்த அறிக்கை உள்துறை அமைச்சர் சுஷீல்குமார் ஷிண்டே தலைமையிலான குழுவின் முன்பு வைக்கப்படும். இந்தக் குழு அறிக்கையை ஆராய்ந்து தமிழக அரசுக்குத் தேவையான நிவாரண

நிதியை வழங்க மத்திய அரசுக்குப் பரிந்துரைகளை வழங்கும். இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழகத்துக்கு நிவாரண நிதி கிடைக்கும்.

கோத்தகிரி காய்கறிக் கண்காட்சி நிறைவு



கோத்தகிரியில் சனிக்கிழமை துவங்கிய கோடை விழா மற்றும் காய்கறிக் கண்காட்சியின் நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை பரிசளிப்புடன் நிறைவு பெற்றது.

கோத்தகிரி நேரு பூங்காவில் மாலை 3 மணிக்கு நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார். தோட்டக்கலை இணை இயக்குநர் கா.மோகன் வரவேற்றார். மாவட்ட ஊராட்சித் தலைவர் மேனகா, கோத்தகிரி பேரூராட்சித் தலைவர் சை.வாப்பு, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மனோகரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் போஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதைத்தொடர்ந்து கண்காட்சியில் அரங்கம் அமைத்த போட்டியாளர்கள், கீஸ்டோன் பவுண்டேஷன், ஐலண்ட் அறக்கட்டளை, சிறுமி மஞ்சுளா அமைத்திருந்த பழங்கால நாணய காட்சி அரங்கம் உள்பட 10 மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறையினருக்கு சுழற்கோப்பை, சிறப்புப் பரிசுகள், கேடயம் உள்ளிட்டவற்றை மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் வழங்கினார். தோட்டக்கலை இணை இயக்குநர் என்.மணி, கோத்தகிரி பேரூராட்சித் தலைவர், சுகாதார ஆய்வாளர் கண்ணன் மற்றும் பேரூராட்சி, ஊராட்சி கவுன்சிலர்கள், மாவட்ட தோட்டக்கலைத் துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குநர் க.ராஜேந்திரன் நன்றி கூறினார்.

மாவட்டத்தில் வறட்சி பாதிப்பை பார்வையிட மத்தியக்குழு ஓரிரு நாளில் வருகை: ஆட்சியர்

கடலூர் மாவட்டத்தில் வறட்சி பாதிப்பைப் பார்வையிட மத்தியக் குழு  செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமை வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை சராசரியைக் காட்டிலும் குறைவாக பெய்ததால் சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டமாக தமிழக அரசு அறிவித்தது.

இந்த 31 மாவட்டங்களிலும் நிலவரியும் ரத்து செய்யப்பட்டது. காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

காவிரி டெல்டா மாவட்டங்களைப்போல் மற்ற மாவட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்தார்.

அதோடு அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி பாதிப்பை பார்வையிடுவதற்காக மாநில நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர்கள் குழுவையும் முதல்வர் நியமித்தார்.

அமைச்சர்கள் குழுவினர் வறட்சி பாதித்த மாவட்டங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அரசிடம் அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதைத் தொடர்ந்து மத்திய அரசிடம் இருந்து ரூ.19,683 கோடியை வறட்சி நிவாரணமாக தமிழக அரசு கோரி உள்ளது. மேலும் வறட்சியைப் பார்வையிட மத்திய நிபுணர் குழுவை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தமிழக அரசு கேட்டுக் கொண்டது.

அதன்பேரில் தமிழகத்தில் வறட்சி பாதிப்பை ஆய்வு செய்வதற்காக மத்திய அரசின் உத்தரவின் பேரில் மத்திய நிபுணர் குழுவினர் திங்கள்கிழமை மாலை சென்னைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் அவர்கள் இருபிரிவாக பிரிந்து திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் ஒரு குழுவினரும், மதுரை உள்ளிட்ட காவிரி டெல்டா அல்லாத மற்ற மாவட்டங்களில் மற்றொரு குழுவினரும் வறட்சி பாதிப்பைப் பார்வையிடுகிறார்கள்.

கடலூர் மாவட்டத்துக்கு மத்திய நிபுணர் குழுவினர் செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமை வருவர் என எதிர்பார்ப்பதாக ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில் சராசரியைக் காட்டிலும் மழை பொழிவு 42 சதவீதம் குறைவாக இருந்ததால் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் வறட்சியின் பிடியில் சிக்கி உள்ளது.

குறிப்பாக காவிரி டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது. தற்போது வறட்சி நிவாரணப் பணிகளில் மாவட்ட நிர்வாகம் அக்கறை செலுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டப் பணியாளர்கள் மூலம் பண்ணைக் குட்டைகள் வெட்டப்பட்டு வருகிறது.

இந்த பண்ணைக்குட்டைகளையும், காவிரி டெல்டா பகுதிகளில் வறட்சி பாதித்த பகுதிகளையும் மத்தியக் குழுவினர் பார்வையிடவுள்ளனர்.

### பு.மலையனூரில் உழவர் பெருவிழா

உளுந்தூர்பேட்டை ஒன்றியம் பு.மலையனூரில் உழவர் பெருவிழா, அங்கன்வாடி மையத்திற்கு இலவச காஸ் அடுப்பு, சிலிண்டர் மற்றும் குக்கர் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

ஒன்றியக்குழுத் தலைவர் கே.பாலு தலைமை வகித்தார். துணைத்தலைவர் இரா.சாய்ராம் முன்னிலை வகித்தார். உளுந்தூர்பேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி வரவேற்றார்.

என்.எல்.ஏ. குமரகுரு உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட 55 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ. 3.32 லட்சம் மதிப்பில் இலவச கேஸ் அடுப்பு, சிலிண்டர் மற்றும் குக்கர்களை வழங்கினார்.

அவர் பேசியதாவது: சொட்டு நீர் பாசன முறையை பயன்படுத்தி சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் பசுமை புரட்சியை ஏற்படுத்த முடியும். மண் பரிசோதனை செய்து அதற்கேற்ற பயிர்களை சாகுபடி செய்திட வேண்டும். தற்போது தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி வேளாண்மைத்துறையில் பலவித திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவ்வாய்ப்பினை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

வேளாண்மை விரிவாக்க அலுவலர் பொன்.காமராஜ், துணை வேளாண்மை அலுவலர் அலெக்சாண்டர் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இலவச நடவு இயந்திரம்: வேளாண் உதவி இயக்குநர் தகவல்

திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளும் வேளாண் குழுக்களுக்கு இலவச நடவு இயந்திரம் வழங்கப்படவுள்ளதாக வேளாண் உதவி இயக்குநர் சண்முகையாக தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட குருவாட்டுச்சேரி ஊராட்சியில் உழவர் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு ஊராட்சிமன்றத் தலைவர் செண்பகவள்ளி ஏழுமலை தலைமை வகித்தார்.

துணைத் தலைவர் சீனிவாசன், வார்டு உறுப்பினர்கள் வேலு, கிரிஜா, சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண் அலுவலர் விஜயலட்சுமி வரவேற்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக வேளாண் உதவி இயக்குநர் சண்முகையா கலந்து கொண்டார்.

விழாவில் அவர் பேசியது:

விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி முறை அதிக லாபத்தை தரக்கூடியது.

இம்முறையில் நெல் பயிரிடும் விவசாயிகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அவர்களை 30 பேர் கொண்ட குழுக்களாக பிரித்து அவர்களுக்கு நவீன நடவு இயந்திரங்களை இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள், வேளாண் துறை அதிகாரிகளோடு இணைந்து விவசாயத்தில் உள்ள அனைத்து நவீன முறைகளையும் கற்றுக் கொண்டு இத்தொழிலில் அதிக லாபம் பெற வேண்டும் என்றார் அவர்.

துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன், வேளாண் பொறியியல் துறை பொறியாளர் துரைசாமி, தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கம், வேளாண் விற்பனை மற்றும் வணிக அலுவலர் அருள்முருகன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக ஊராட்சிமன்றத் தலைவர் செண்பகவள்ளி ஏழுமலை, விவசாயிகளுக்கு கையேடு மற்றும் இடுபொருட்களை வழங்கினார்.

## கொடைக்கானலில் பிளம்ஸ் விளைச்சல் குறைவு

கொடைக்கானலில் பருவ மழை பொய்த்ததால் பிளம்ஸ் விளைச்சல் குறைந்து விலை அதிகரித்துள்ளது.

கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகள் விரும்பும் பிளம்ஸ்,பேரி, பேஷன்ஸ் புரூட், மரத்தக்காளி போன்ற பழ வகைகள் விளைகின்றன. இதில் பிளம்ஸ் பழம் செண்பகனூர், பிரகாசபுரம், நாயுடுபுரம், சின்னப்பள்ளம், பெரும்பள்ளம்,வில்பட்டி, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, பள்ளங்கி, கோம்பை, புலியூர்,உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பிளம்ஸ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் விளையும் பிளம்ஸ் பழம், வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

சீசன் மாதத்தில் மட்டும் விளையும் தன்மை கொண்டதால், சுற்றுலாப் பயணிகளிடையே பிளம்ஸ் பழத்துக்கு வரவேற்பு அதிகம்.

மார்ச் மாதத்தில் தொடங்கி, ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் அதிக விளைச்சல் அடைந்து விற்பனைக்கு வருவது வழக்கம்.

இந்தப் பழ மரங்களை விவசாய நிலங்களில் ஊடுபயிராக விவசாயம் செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, அட்டுவம்பட்டி விவசாயி ராமசாமி கூறியது:

கொடைக்கானல் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் ஊடு பயிராக பிளம்ஸ் மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. பிளம்ஸ் பழத்தில் கோடை பிளம்ஸ்,

கரி பிளம்ஸ், கோவிகோடா, கிரீன் கேஜ் போன்ற வகைகள் உள்ளன. இதில் கோடை பிளம்ஸ் சீசன் காலத்தில் மட்டுமே விளையக் கூடியது.

ஜனவரி, பிப்ரவரியில் நல்ல மழை பெய்தால் பிளம்ஸ் நன்கு விளைச்சல் தரும்.

ஆனால், இந்தாண்டு பருவ மழை பொய்த்ததால் பிளம்ஸ் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டது.

மேலும் கொடைக்கானல் பகுதிகளில் விளை நிலங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதால் மரங்கள் அழிக்கப்பட்டு காட்டேஜ்கள் உருவாக்கப்படுகின்றன. இதனால் பிளம்ஸ் வரத்து வெகுவாகக் குறைந்து விட்டது. வரும் காலங்களில் பிளம்ஸ் பழம் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

காட்டேஜ்,வீடுகள் கட்டுபவரிடத்தில் நகராட்சி மற்றும் ஊராட்சி அதிகாரிகள்

மரங்களை வெட்டக் கூடாது அல்லது பழக்கன்றுகள் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் பழ மரங்கள் காப்பாற்றப்படும் என்றார்.

பழ வியாபாரி ராஜ்குமார் கூறியது: கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக பழ வியாபாரம் செய்து வருகிறேன். சீசன் காலங்களில் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் பிளம்ஸ் பழம் வாங்கிச் செல்வது வழக்கம்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் கிலோ ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்கப்பட்டது.

தற்போது ரூ. 120 முதல் ரூ.150 வரை விற்பனையாகிறது.

பிளம்ஸ் விளைச்சல் வெகுவாகக் குறைந்து வரத்தும் குறைந்து விட்டதால், விலை அதிகமாகி வருகிறது. இங்கு விளையும் பழம் சென்னை, கேரளம், கர்நாடகம் ஆகிய இடங்களுக்கு அதிகமாக அனுப்பப்படும்.

தற்போது விலை அதிகமாக உள்ளதாலும், பிளம்ஸ் கிடைக்காததாலும் விற்பனை பாதிக்கப்படுகிறது. கொடைக்கானலில் பழவகை மரங்களை வளர்ப்பதற்கு தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து தோட்டக் கலைத் துறை அலுவலர் ஒருவர் கூறியது:

கொடைக்கானலில் தோட்டக்கலைத் துறை சார்பில் நடைபெறும் விவசாயக் கருத்தரங்கு மற்றும் பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு பேரி, பிளம்ஸ், பீச்சஸ் போன்ற பழ வகைகளின் நாற்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஆனால், விவசாய நிலங்கள் விற்பனை செய்யப்படுவதால், பழ வகைகளின் மரங்கள் குறைந்து, வரத்தும் வெகுவாகக் குறைந்து வருகிறது.

இருப்பினும், விவசாயிகளிடம் விவசாய நிலங்கள் குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றார்.

## விவசாயிகளுக்கு ரூ.1.31 கோடி வறட்சி நிவாரண நிதி: அமைச்சர்

மாவட்டத்தில் வறட்சி நிவாரணமாக 1 ஏக்கர் நெல் சாகுபடிக்கு ரூ.5 ஆயிரம், மிளகாய் சாகுபடிக்கு ரூ.3 ஆயிரம் என ரூ.1.31 கோடி நிதி வழங்கப்பட உள்ளது என கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் எஸ். சுந்தரராஜ் கூறினார்.

பரமக்குடி ராஜா மஹாலில் வேளாண் துறை சார்பில் பாரம்பரியப் பொருட்களின் மதிப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதற்கு மாவட்ட ஆட்சியர் க. நந்தகுமார் தலைமை வகித்தார். முதுகுளத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் மு. முருகன், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் ஜி. முனியசாமி, நகர்மன்றத் தலைவர் எம். கீர்த்திகா, ஒன்றியக் குழுத் தலைவர் ஜி. நாகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கா. சக்திமோகன் வரவேற்றார்.

அமைச்சர் எஸ். சுந்தரராஜ் பயனாளிகளுக்கு மானிய விலையில் விவசாயப் பொருள்களை வழங்கிப் பேசியது:

நமது முன்னோர்கள் கம்பு, கேழ்வரகு போன்ற சத்துமிக்க பாரம்பரிய உணவு உண்டதால் நீண்டநாள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தனர். நாம் தற்போது பாரம்பரிய உணவு வகைகளைப் பயிரிடாமல், ரசாயனம் கலந்து உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகளை சாப்பிடுவதால் ஆரோக்கியமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது வறட்சி நிவாரணமாக பல்வேறு திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார். உழவர் பாதுகாப்பு அட்டை 6,99,445 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முதியோர் உதவித் தொகை, கணவரால் கைவிடப்பட்டோர், திருமண உதவித் தொகை வழங்கிட இம்மாவட்டத்திற்கு ரூ.46.86 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

உழவர் அட்டை மூலம் 8 ஆயிரம் ஆண்களும், 10 ஆயிரம் பெண்களும், கல்வி உதவித் தொகையில் 45,577 மாணவ-மாணவிகளுக்கும் ரூ 1.3 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இயற்கை மரணம் அடைந்தவர்களுக்கு ரூ.10 ஆயிரம், ஈமச்சடங்கு செய்ய ரூ.2,500, விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ரூ.1 லட்சம் வழங்கப்படுகிறது. இவ்வாறு விவசாயிகளின் நலனை பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

மாவட்டத்தில் வறட்சி நிவாரணமாக 1 ஏக்கர் நெல் சாகுபடிக்கு ரூ.5 ஆயிரம், மிளகாய் சாகுபடிக்கு ரூ.3 ஆயிரம் என ரூ.1.31 கோடி நிதி வழங்கப்பட உள்ளது.

விவசாய உற்பத்தியை பெருக்கிட மழைக் காலங்களில் வீணாகக் கடலில் கலக்கும் மழை நீரை தேக்க நீர்க்கசிவுக் குட்டைகள், வரத்துக்கால்வாய் பராமரிப்பு எனப் பல்வேறு பணிகள் பொதுப்பணித் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கும், தற்போது எற்பட்டுள்ள தேவைக்கேற்ப முன்னோர்கள் பயிரிட்ட பாரம்பரிய உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யவும் விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் வேளாண் துறை அதிகாரிகள் பா. பானுமதி, வ. கணேஷ் ராஜா, ப. அமலாபானு, எஸ். சக்திவேல், து. ஆரோக்கியசுகுமார், பா. இளங்கோவன், மு. ராஜகோபால் ஆகியோர் விவசாய தொழில்நுட்பம் குறித்து விளக்கினர்.

வேளாண் உதவி இயக்குநர் எஸ். கண்ணையா நன்றி கூறினார்.

### வேளாண் பொருள்களை பதப்படுத்த இலவச பயிற்சி

சென்னையில் உள்ள உணவு மற்றும் பால் வளத் தொழில்நுட்பக் கல்லூரியில், வேளாண் பொருள்களை பதப்படுத்துதல் குறித்த ஒரு மாத இலவச பயிற்சி மே 13ஆம் தேதி தொடங்குகிறது.

இந்த பயிற்சியின்போது மதிய உணவு, தங்கும் இடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படும். உணவு தொழில்நுட்ப மாணவர்கள், கேட்டரிங் படித்த மாணவர்கள்,

படித்துக் கொண்டிருக்கும் மற்றும் பட்டப் படிப்பை முடித்த மாணவர்கள், உணவு சம்பந்தமான தொழில் தொடங்க ஆர்வமுள்ள மாணவர்கள் பங்கேற்கலாம்.

மேலும் விவரங்களுக்கு முதல்வர், உணவு மற்றும் பால் வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவள்ளி, அலமாதி அஞ்சல், செங்குன்றம் வழி, சென்னை -600052. தொலைபேசி எண்கள்: 044-27680214. செல்போன்: 9444155312.

### சாமளாபுரத்தில்உழவர் பெருவிழா

பல்லடம் அருகே சாமளாபுரத்தில், அய்யன்கோவில் திருமண மண்டபத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது .

பேரூராட்சித் தலைவர் பூபதி தலைமை வகித்தார். பாசன சபைத் தலைவர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகம், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் சுகந்தி ஆகியோர் நுண்ணீர்ப் பாசனத் திட்டம், விதைநேர்த்தி, மண்மாதிரி எடுத்தல் குறித்து விளக்கினர். கால்நடைப் பராமரிப்புக் குறித்து துறை அலுவலர் செந்தில்முருகன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் லதா, செளந்திரபாண்டியன், சிவா ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

### விவசாயிகளின் நகைக் கடனை தள்ளுபடி செய்யக் கோரிக்கை

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நகைக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று, தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இச் சங்கத்தின் மாவட்ட ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில், நடப்பு நிதியாண்டில் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசு அமல்படுத்த, காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும். விவசாயத் தேவைக்காக வங்கிகளில் நகையை அடமானம் வைத்து பயிர்க்கடன் வாங்கியுள்ளனர். மழையின்றி வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் வங்கியில் வாங்கிய கடன்களை மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும்.

தமிழக-கேரள அரசுகள் உடன்பாடு செய்து கொண்டும், கிடப்பில் போட்டுள்ள பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை உடனடியாக நிறைவேற்றும் வகையில் உயர்மட்டக் குழு அமைத்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். குடிநீர்த் தேவைக்காகவும், சிறப்பு நனைப்புக்காகவும் கீழ்பவானி வாய்க்காலில் 15 நாள்களுக்கு தண்ணீர் திறக்க பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதித்த நீண்ட காலப்பயிரான தென்னை, பனை மற்றும் மர வகைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்.

மழைக் காலத்தில் வீணாகும் தண்ணீரைத் தேக்கி வைக்க அணை, ஏரி, குளங்களைத் தூர்வாரவும், வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துக் கொள்ளவும் அனுமதி வழங்க வேண்டும். வாய்க்கால்களில் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டச் செயலாளர் சுப்பு, லட்சுமணன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## வேளாண் விளை பொருள்கள் விழிப்புணர்வுப் பேரணி

பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களின் மதிப்பை வெளிப்படுத்தும் பேரணி, அரச்சலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மொடக்குறிச்சி வட்டார வேளாண் துறை சார்பில் நடைபெற்ற இப் பேரணியில், வேளாண் பொருள்களான பருத்தி, இளநீர், சீயக்காய் உள்ளிட்டவற்றை பொது மக்கள் பயன்படுத்த வலியுறுத்தப்பட்டது.

மொடக்குறிச்சி எம்.எல்.ஏ. ஆர்.என்.கிட்டுச்சாமி இப் பேரணியைத் தொடங்கி வைத்தார். அரச்சலூர் காவல் நிலையத்தில் இருந்து தொடங்கிய பேரணி அண்ணா நகர் வழியாக அரச்சலூர் பேரூராட்சி அலுவலகத்தை வந்தடைந்தது. பேரூராட்சித் தலைவர் விஜயலட்சுமி கோவிந்தசாமி தலைமை வகித்தார்.

மொடக்குறிச்சி வேளாண் உதவி இயக்குநர் குழந்தைவேல், ஒன்றியக் குழுத் தலைவர் தமயந்தி சிவானந்தம், துணைத் தலைவர் கணபதி, பேரூராட்சித் தலைவர்கள் கதிர்வேல் (அவல்பூந்துறை), சுப்பிரமணி (வடுகபட்டி), ஊராட்சித் தலைவர்கள் முத்து (60 வேலம்பாளையம்), கிருஷ்ணமூர்த்தி (அ.அனுமன்பள்ளி ), பிரகாஷ் (46 புதூர்), நவரசம் மகளிர் கல்லூரித் தலைவர் தாமோதரன், துணை முதல்வர் செல்வம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

வனத் துறை, தோட்டக்கலைத் துறை, அரச்சலூர் பேரூராட்சி செயல் அலுவலர் செü்ந்தரராஜன், நவரசம் மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள், விவசாயிகள், சுயஉதவிக் குழுவினர், உழவர் குழுவினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் விவசாயிகளுக்கான ஆட்சி

தமிழகத்தில் விவசாயிகளின் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, விவசாயிகளுக்கான ஆட்சி நடைபெற்று வருவதாக கீழ்பென்னாத்தூர் எம்எல்ஏ ஏ.கே.அரங்கநாதன் கூறினார்.

திருவண்ணாமலையை அடுத்த சாலையனூர், எம்.என்.பாளையம் ஊராட்சிகளில் ஞாயிற்றுக்கிழமை உழவர் பெருவிழாக்கள் நடைபெற்றன. இவ்விரு விழாக்களுக்கும், ஒன்றியக் குழுத் தலைவர் ஏ.கோவிந்தராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ரமணன் வரவேற்றார்.

இதில் கீழ்பென்னாத்தூர் எம்எல்ஏ ஏ.கே.அரங்கநாதன் பேசியது: தமிழக விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை தமிழக முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்றி வருகிறார். குறிப்பாக பெண்கள் படும் இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்களை இலவசமாகவே வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். இத்திட்டம் பெண்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

எம்.என்.பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த பயனாளிகளுக்கு ஓரிரு வாரங்களில் மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறிகள் வழங்கப்படும்.

இதேபோல, வேளாண்மையில் அதிகப்படியான மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் இதுபோன்ற உழவர் பெருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. விவசாயிகள் இவ்விழாக்களில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்றார்.

தொடர்ந்து, பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள், இடுபொருள்கள், பூச்சிமருந்துகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை எம்எல்ஏ ஏ.கே.அரங்கநாதன் வழங்கினார்.

விழாக்களில், ஒன்றிய அதிமுக அவைத் தலைவர் கோவிந்தசாமி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பி.வெள்ளைகண்ணு, புகழேந்தி, ஊராட்சித் தலைவர் தேவி, ஊராட்சி அதிமுக செயலாளர்கள் துரை, சேகர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள்
திருவண்ணாமலை மாவட்டத்தில் திங்கள்கிழமை நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

திருவண்ணாமலை ஒன்றியம் பழையனூர், அத்திப்பாடி, நவம்பட்டு, துரிஞ்சாபுரம் ஒன்றியம் சடையனோடை, சானானந்தல், கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் காட்டுவெளாந்தல், கலித்தேரி, செங்கம் ஒன்றியம் இளங்குண்ணி, மணிக்கல், தண்டராம்பட்டு ஒன்றியம் வாழவச்சனூர், அல்லப்பனூர், புதுப்பாளையம் ஒன்றியம் மேல்படூர், நத்தவாடி, போளூர் ஒன்றியம் துரிஞ்சிகுப்பம், விளாங்குப்பம், நீப்லாம்பட்டு, கலசப்பாக்கம் ஒன்றியம் ஆதமங்கலம், கடலாடி, சேத்துப்பட்டு ஒன்றியம் ஆத்துரை, சித்தாத்துரை ஆகிய கிராமங்களில் திங்கள்கிழமை காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இதேபோல, ஆரணி ஒன்றியம் அத்திமலைப்பட்டு, மேற்கு ஆரணி ஒன்றியம் பூசமலைகுப்பம், வந்தவாசி ஒன்றியம் கொடநல்லூர், சேதுராகுப்பம், தெள்ளாறு ஒன்றியம் தென்னாத்தூர், அருந்தோடு, சீயமங்களம், பெரணமல்லூர் ஒன்றியம் அன்மருதை, நரியம்பாடி, செய்யாறு ஒன்றியம் புதுக்கோட்டை, சிறுவேளியநல்லூர், அனக்காவூர் ஒன்றியம் மடிப்பாக்கம், நேத்தப்பாக்கம், வெம்பாக்கம் ஒன்றியம் காகணம், கரந்தை, திருப்பனமூர் கிராமங்களிலும் காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இவ் விழாக்களில் வேளாண் கண்காட்சியும் இடம்பெறுகிறது. அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்களை வேளாண் துறை அதிகாரிகள் எடுத்துரைக்கின்றனர். எனவே, விவசாயிகள், தங்கள் பகுதியில் நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

இடிப்பள்ளியில் உழவர் பெருவிழா

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஒன்றியம், இடிப்பள்ளி கிராமத்தில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தலைமை வகித்து, வேளாண்மை துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்துப் பேசினார்.

வேளாண் அலுவலர் செந்தில்குமார், மண் மாதிரி எடுக்கும் முறை குறித்தும், விதை நேர்த்தி செய்யும் முறை குறித்தும் செயல் விளக்கம் அளித்தார். வேளாண் வணிகத் துறை சார்பில், உதவி வேளாண் அலுவலர் நாகராஜ், மாங்காய் தரம் பிரிப்பது, அறுவடைக்குப் பின் தொழில் நுட்பம் குறித்து விளக்கிப் பேசினார்.

தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, கால்நடைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை விளக்கிக் கூறினர். மேலும் விழாவில், கருத்துக் கண்காட்சி, கலை நிகழ்ச்சி மற்றும் வீடியோ படம் மூலம் துறையின் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் 250-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். விழா ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

## விவசாயிகளுக்கு தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்கக் கோரிக்கை

விவசாயிகளுக்கு தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என, தமிழக விவசாயிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் கே.எம்.ராமகவுண்டர் தலைமை வகித்தார். மத்திய மாவட்டத் தலைவர் பெருமா வரவேற்றார்.

மாவட்ட பொதுச் செயலாளர் சுந்தரேசன், மத்திய மாவட்டப் பொருளாளர் அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநிலத் தலைவர் சிவசாமி மற்றும் இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் தெய்வ சிகாமணி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில், ஜூலை 5-ஆம் தேதி நடைபெறும் உழவர் தின பேரணியை இந்த ஆண்டு கிருஷ்ணகிரியில் நடத்துவது. தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவுவதால் வறட்சி நிவாரணமாக மானாவாரி பகுதிகளில் மாநில அரசு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரமும், மத்திய அரசு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரமும் வழங்க வேண்டும். மற்ற பகுதிகளுக்கு மாநில அரசு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

தமிழக அரசு கூட்டுறவு கடன்களையும், மத்திய அரசு தேசிய வங்கிக் கடன்களையும் முழுவதுமாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

விவசாயிகள் விண்ணப்பித்தவுடன் மின் வாரியம் மின் இணைப்பு வழங்க வேண்டும். முன் வழங்கப்பட்ட மின் பகிர்மானங்களை பிரித்து கூடுதல் மின் பகிர்மான நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

ஊரக வேலை உறுதித் திட்டத்தை விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

அடிக்கடி ஏற்படும் மின் தடையைப் போக்கி விவசாயத்திற்கு தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.

விளை நிலங்களை சேதம் செய்யும் வன விலங்குகளை சுட விவசாயிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம் மற்றும் ஆந்திரத்தில் உற்பத்தியாகும் நதி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கினை பெற்றுத் தர, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள், விவசாயிகள் நிலங்களை கையகப்படுத்தப்படுத்தும் போது 10 மடங்கு வெளிச் சந்தை மதிப்பில் விலை கொடுத்து, விவசாயிகளின் சம்மதத்தின் பேரில் நிலம் எடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவில் 50 சதம் நேரடியாக பயிர் செய்வதற்கு முன்னரே வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தாராபுரத்தில் உழவர் பெருவிழா

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகேயுள்ள தாராபுரம் ஊராட்சியில் ஞாயிற்றுக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவையொட்டி, கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவச் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

முகாமில், கறவை மாடுகளுக்கு சினை ஊசி, நோய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. இதேபோல, விலையில்லா ஆடுகளுக்கும் தடுப்பு ஊசி, குடல்புழு நீக்கம் செய்யும் மருந்துகள் அளிக்கப்பட்டன.

இந்த முகாமில், தாராபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை பெற்றனர்.

இந்த விழாவில், சேலம் மாவட்ட வேளாண்மைத் துணை இயக்குநர் சுந்தர சவுண்டப்பன், விதைச் சான்று துணை இயக்குநர் செப்ந்தர்ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு, வேளாண்மைத் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

கால்நடை மருத்துவர் ஜானகிராமன், வேளாண்மை அலுவலர் சம்பத்குமார், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் ராஜரத்தினம், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் சேகர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் முகாமில் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் வேளாண்மை துறை சார்ந்த பல்வேறு திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

600 பண்ணைக்குட்டைகள் அமைக்கத் திட்டம்'

அரியலூர் மாவட்டத்தில் 600 பண்ணைக்குட்டைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார்.

அரியலூர் மற்றும் ஜயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பண்ணைக்குட்டை அமைப்பது, மீன் வளர்ப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஊராட்சித் தலைவர்களுடன் அண்மையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஆட்சியர் மேலும் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சித் தலைவர்கள் பல்வேறு திட்டங்களை மக்களிடம் முழுமையாகக் கொண்டு செல்ல வேண்டும். குறிப்பாக பண்ணைக்குட்டை அமைப்பது, ஏரி, குளம் தூர்வாருவது, வேலை உறுதித் திட்டம் மற்றும் பசுமை வீடு திட்டம், இந்திராகாந்தி நினைவு குடியிருப்பு திட்டங்கள் ஆகியவை குறித்து பொதுமக்களிடம் சரியான நேரத்தில் விளக்குவது கடமையாகும்.

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் பண்ணைக்குட்டை அமைத்து மீன் வளர்க்க மாவட்ட நிர்வாகம் அனைத்து உதவிகளையும் செய்யும். விவசாயம் மட்டுமன்றி, விவசாயம் சார்ந்த தொழில்கள் செய்ய 600 பண்ணைக்குட்டைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிகழாண்டு பசுமை வீடு திட்டம், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயனாளிகள் அரசு குறிப்பிட்டுள்ள காலகட்டத்தில் வீடுகளை முடிக்க ஊராட்சித் தலைவர்கள் உதவ வேண்டும். மாற்றுத்திறனாளிகளுகள் 3 சத வீடு கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு விதித்துள்ள அளவுகோலை மாற்றும்போது காலம், நேரம் நீடிக்கிறது. எனவே, நவம்பருக்குள் அனைத்துப் பணிகளையும் முடிக்க வலியுறுத்த வேண்டும் என்றார் அவர்.

கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) முனியசாமி, இணை இயக்குநர் (வேளாண்) குணசேகரன், ஒன்றியத் தலைவர்கள் வை.கோ.சி. கவிதா (அரியலூர்), கண்ணகி குப்புசாமி (ஜயங்கொண்டம்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கரநாரயணன் (அரியலூர்), சபாநாயகம், கோபு (ஜயங்கொண்டம்) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெரியக்கோட்டையில் உழவர் பெருவிழா

மதுக்கூர் ஒன்றியம், பெரியக்கோட்டை கிராமத்தில் உழவர் பெருவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் அமுதா துரைசெந்தில் தலைமை வகித்தார். மதுக்கூர் வேளாண் உதவி இயக்குநர் ஆர். மோகன்ராஜ், ஒன்றியக் குழு உறுப்பினர் ஏ.ஜெ. முருகேசன் முன்னிலை வகித்தனர்.

இதில், வேளாண்துறை திட்டங்கள், நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது.

மண் மாதிரி ஆய்வு, எலி ஒழிப்பு முறை ஆகியன குறித்து செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. விழாவில் பங்கேற்ற விவசாயிகளுக்கு கையேடு, மினி கிட், எலி ஒழிப்பு மருந்து ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன.

### மேட்டூர் அணை நீர்மட்டம் : 22.71 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 22.71 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### பாரம்பரிய சிறு தானியங்கள் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்'

மருத்துவக் குணங்கள் கொண்ட பாரம்பரிய சிறு தானியங்களின் பயன்பாடு, உற்பத்தி குறித்து வேளாண் துறை விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார் அமைச்சர் கே.ஏ. ஜெயபால்.

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சனிக்கிழமை வேளாண் துறை சார்பில் நடைபெற்ற பாரம்பரிய பயிர்கள் உபயோகம் குறித்த கருத்தரங்கத்தில் அவர் பேசியது:

உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெறவும், உணவு உற்பத்தியை 2 மடங்காக உயர்த்தி, விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்காக உயர்த்தும் வகையிலும், 2-ம் பசுமை புரட்சிக்கு வித்திடும் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்துகிறது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயற்ற வாழ்வுக்கு உணவுப் பழக்க வழக்கங்களும், சத்தான உணவும் அவசியம். சுமார் 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்பு கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, தினை, பனிவரகு உள்ளிட்ட சிறு தானியங்களை மக்கள் அதிகம் பயன்படுத்தினர். இதனால், அப்போதைய காலத்தில் நோய்த் தாக்குதல் குறைவாக இருந்தது.

காலப் போக்கில் சிறு தானியங்களின் பயன்பாடு வழக்கொழிந்து, நாகரீக உணவுகளை மனிதன் உட்கொள்ளத் தொடங்கியதும் உடல் வலிமை குன்றி, நோய்த் தாக்குதல் எளிதாகி வருகிறது.

நாகை மாவட்டத்தில் சிறு தானியங்கள் உற்பத்திக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே, பாரம்பரிய மருத்துவக் குணம் கொண்ட சிறு தானியங்களின் பயன்பாடு மற்றும் உற்பத்தி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேளாண் துறை முனைப்புக் காட்ட வேண்டும் என்றார் அமைச்சர் கே.ஏ. ஜெயபால்.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார்.

இளநீரில் உள்ள மருத்துவக் குணங்கள் குறித்து வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் ஆர். ராஜேந்திரன், சீயக்காயின் முக்கியத்துவம் குறித்து மாவட்ட வனப் பாதுகாப்பு அலுவலர் சு. ராமசுப்பிரமணியன், பருத்தி பயன்பாடுகள் குறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ஜி. கணேசன், சிறுதானியப் பயிர்களின் மருத்துவ குணங்கள் குறித்து வேளாண் வணிகள் மற்றும் விற்பனை மைய துணை இயக்குநர் என். சுந்தர் ஆகியோர் பேசினர்.

கீழ்வேளூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் நாகை மாலி, மாவட்ட ஊராட்சித் தலைவர் ஏ.கே. சந்திரசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், வருவாய்க் கோட்டாட்சியர் வே. மணிகண்டன், நகர்மன்றத் தலைவர் மஞ்சுளா சந்திரமோகன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வின்துரை மற்றும் வேளாண் அலுவலர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.கருத்தரங்கில் பங்கேற்ற அனைவருக்கும் கேழ்வரகு கூழ் மற்றும் சிறு தானிய பயன்பாடுகள் குறித்த கையேடு வழங்கப்பட்டது. இளநீர், சீயக்காய், பருத்தி மற்றும் கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, தினை, பனிவரகு உள்ளிட்ட சிறுதானியங்கள் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

திருவாரூரில் விவசாயக் கல்லூரி தொடங்க வலியுறுத்தல்
டெல்டா மாவட்டங்களின் மையப் பகுதியாக உள்ள திருவாரூரில் விவசாயக் கல்லூரித் தொடங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருவாரூரில் மே 4, 5 ஆகிய இருநாள் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில

பிரதிநிதித்துவ பேரவை கூட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இதற்கானத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

போதிய நீரின்றி நிகழாண்டு முற்றிலும் கருகி அழிந்து போன பயிர்களுக்கு, சாகுபடி நீரின்றி போடப்பட்ட தரிசு நிலம் மற்றும் வேலையிழந்த விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

மத்திய அரசு காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு இயற்கை பேரிடர் நிதியிலிருந்து அரசியல் வேறுபாடின்றி தமிழகத்துக்கு உரிய தொகை வழங்க வேண்டும். டெல்டா மாவட்ட விவசாயிகள் பயிர் செய்துள்ள கோடை சாகுபடிக்குத் தேவையான மும்முனை மின்சாரம் தடையின்றி வழங்க வேண்டும்.

பயிர்க் காப்பீடு முறையில் மாற்றம் செய்து, எளிமையாக்கப்பட்டு அனைவரும் பயன்பெறும் வகையில் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை முதல்வர் நேரில் அழைத்துப் பேச வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் சங்கப் பொதுச் செயலர் ரா. பாலசுப்பிரமணியன், துணைத் தலைவர்கள் சிவக்குமார், அப்பர், கிருஷ்ணசாமி, அகோரம், செயலர்கள் குமாரவேல், அன்பரசு, செல்வம், திருவாரூர் மாவட்டத் தலைவர் சவுந்தர்ராஜன், செயலர் பைரவநாதன், மாநில அரசு ஊழியர் சம்மேளன

அகில இந்திய பொதுச் செயலர் ரா. முத்துசுந்தரம், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க அகில இந்திய செயலர் உ. வாசுகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தின் போது சங்க மாநிலத் தலைவர் ரா. தமிழ்ச்செல்வி அளித்த பேட்டி:

கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 2-ல் மாவட்டத் தலைநகரங்களில் போராட்ட ஆயத்த மாநாடு மற்றும் ஜூலை 15 முதல் 19 வரை மாநிலம் முழுவதும் ஊழியர் சந்திப்பு இயக்கம் நடத்தப்படும்.

ஜூலை 25-ல் மாவட்டத் தலைநகரங்களில் மறியல் போராட்டம், கோரிக்கை குறித்து முதல்வர் ஜெயலலிதா  சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தாதப் பட்சத்தில் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் நடத்தப்படும்.

பணி நீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கக் கோரி மதுரையில் ஜூன் 8-ம்  தேதி கோரிக்கை மாநாடு நடத்தப்படும்.

கருவூலத் துறை  ஊழியர்களின் பணப்பயன்கள் உரிய வகையில்  வழங்கக் கோரி மே 21-ல் மாவட்ட அளவில் கோரிக்கை மாநாடு நடத்தப்படும் என்றார் தமிழ்ச்செல்வி.

தினமலர்

**மானிய விலையில் சூரியசக்தி மின் மோட்டார்கள் உழவர் திருவிழாவில் அறிமுகம்**

திருத்தணி:சூரியசக்தி மூலம் இயக்கும் மின்மோட்டார்கள் விவசாயிகள் வாங்குவதற்கு, அரசு மானியத்துடன் கடனுதவி வழங்கும் திட்டம், உழவர் திருவிழாவில் அறிமுகம் செய்யப்பட்டது.கடனுதவிதிருத்தணி ஒன்றியம், செருக்கனூர், பட்டாபிராமபுரம் ஆகிய ஊராட்சிகளில், உழவர் திருவிழா, திருத்தணி வேளாண்மை உதவி இயக்குனர் பிரசாத் தலைமையில் நடந்தது.இதில், திருவள்ளூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, வேளாண்மை துறை மூலம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார்.இதில் அவர் பேசியதாவது:முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்த திட்டமான, சூரியசக்தி மூலம் மின்மோட்டார்களை இயக்குவதற்கு, ஒரு விவசாயிக்கு, ஐந்து லட்சம் ரூபாய் வீதம் கடனுதவி வழங்கப்படுகிறது. இதற்கு அரசு மானியமாக, 4.20 லட்சம் ரூபாய் வழங்குகிறது. கடனுதவி பெறும் விவசாயி, 80 ஆயிரம் ரூபாய் மட்டும் திருப்பி செலுத்தினால் போதும். முன்பதிவுவிவசாயிகள் இத்திட்டம் மூலம் மின்மோட்டார் வாங்குவதற்கு, முன்வைப்பு தொகையாக, 10 ஆயிரம் ரூபாய்க்கான வரைவு காசோலை அந்தந்த பகுதி வேளாண்மை உதவி இயக்குனரிடம் செலுத்தி முன்பதிவு செய்துக் கொள்ள வேண்டும். இந்த தொகை, விவசாயிகள்

செலுத்த வேண்டிய, 80 ஆயிரம் ரூபாயில் இருந்து கழித்துக் கொள்ளப்படும். முதற்கட்டமாக திருத்தணி ஒன்றியத்தில், பத்து விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. தேவையான விவசாயிகள் விரைவில் முன்வைப்புத் தொகை செலுத்துபவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அடிப்படையில் கடனுதவி வழங்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.தொடர்ந்து, 20 விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம், 50 சதவீதம் மானிய விலையில், 16 விவசாயிகளுக்கு வேப்ப எண்ணெய், 20 பேருக்கு விதை நெல் உட்பட, பல்வேறு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டன.விழாவில், விதை சான்று அலுவலர் சண்முகவள்ளி, வேளாண்மை உதவி அலுவலர் விஜயகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஏழுமலை, முனுசாமி உட்பட வேளாண் மை துறை அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.தொடர்புக்கு: திருத்தணி வேளாண்மை உதவி அலுவலர் சிவகுமார் 9047488818

## விறுவிறு! பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி... விவசாய பணியில் 100 நாள் பணியாளர்கள்

கரூர்: நூறுநாள் வேலை திட்டத்தின் கீழ், கரூர் மாவட்டத்தில், 135 பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

பருவமழை ஏமாற்றம், விதைகள், உரத்தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு, விவசாயத்துக்கு தேவைப்படும் மாடு, ஆடு உள்ளிட்ட கால்நடைகளின் உற்பத்தி குறைவு, விவசாய கூலியாள் பற்றாக்குறை, இளைய தலைமுறையினரின் மாற்று தொழில் ஆர்வத்தால், விவசாயம் கொஞ்சம், கொஞ்சமாக நலிவடைகிறது.

விவசாயத்தை காக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இருப்பினும், கூலியாள் பற்றாக்குறை, விவசாயத்துக்கு பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. மேலும் மத்திய அரசு செயல்படுத்தி வரும், நூறு நாள் வேலை திட்டத்தால், வேளாண் பணிகள் கடுமையாக பாதிக்கப்படுகிறது என, விவசாய சங்க பிரதிநிதிகள் புகார் கூறி வந்தனர். இதனால் விவசாய பணிகளை, நூறுநாள் வேலை திட்ட பயனாளிகளை கொண்டு மேற்கொள்ளலாம் என, அரசு அறிவிப்பு செய்தது.

இதன்படி குறு மற்றும் சிறு விவசாய நிலங்கள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச நிலங்கள், இந்திரா வீட்டு வசதி வீடுகளில் குடியிருப்போர் நிலங்கள், வேளாண்துறை மற்றும், வனத்துறைக்கு சொந்தமான நிலங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றில், நூறுநாள் வேலை திட்ட பணியாளர்களை பயன்படுத்தலாம் என, அரசால் மாவட்ட நிர்வாகத்துக்கு வழிகாட்டுதல் உத்தரவு அனுப்பப்பட்டு உள்ளது.

இந்நிலையில் காவிரியில் இருந்து, கர்நாடகம் வழக்கம்போல் தண்ணீர் தர மறுத்ததால், பாசனத்திற்கான நீர் ஆதாரங்களில் தண்ணீர் இல்லை. இதனால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பருவமழை காலங்களில் பெய்யும் மழைநீரை சேமிக்கவும், நிலத்தடி நீர் மாட்டத்தை உயர்த்தவும், விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகளை அதிகளவில் அமைக்க, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதில் நூறுநாள் வேலை திட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

கரூர் மாவட்டத்தில், 58 ஆயிரத்து, 646 விவசாயிகள், 37 ஆயிரத்து, 562.13 ஹெக்டேர் நிலப்பரப்பை, நூறுநாள் வேலை திட்டத்தில் விவசாய பணிகள் மேற்கொள்ள பதிவு செய்துள்ளனர். இதில் முதற்கட்டமாக, 135 பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. ஒரு குட்டை, 15 மீட்டர் அகலம், 15 மீட்டர் நீளம், 1.5 மீட்டர் ஆழம் கொண்டவையாக அமைக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அதிகாரி கூறியதாவது:

நிலத்தின் அளவை பொறுத்து குட்டைகளின் அளவும் வேறுபடுகிறது. பெரும்பாலும் குட்டைகள், போர்வெல் அல்லது கிணற்றுக்கு அருகில் அமைக்கப்படுகிறது. மழை காலத்தில் இந்த குட்டைகளில் தண்ணீர் தேங்குவதன் மூலம், நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

அதோடு வறட்சி காலத்தில் நீரை தேக்கி வைத்து, பாசனம் செய்யவும் உதவியாக இருக்கும். ஒரு விவசாயிக்கு, அதிகபட்சமாக, 1.5 லட்சம் ரூபாய் மனித உழைப்பு பயன்படுத்தி கொள்ளலாம். இந்த தொகைக்குள் எத்தனை பண்ணை குட்டைகள் வேண்டுமானலும் அமைத்து கொடுக்கப்படும்.

இவ்வாறு கூறினார்.

டெல்டா மாவட்டங்களில் வறட்சியால் வருமானம் இழந்துள்ள விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு, இத்திட்டம் மூலம் வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### வேளாண்துறை வளர்ச்சிக்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு! அமைச்சர் தாமோதரன் தகவல்

பேரூர்:""வேளாண்துறை வளர்ச்சிக்கு, நடப்பாண்டில் ஐந்தாயிரத்து 181 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,"என, உழவர் விழாவில், தமிழக வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார்.

பேரூர் அருகே காளம்பாளையத்தில் உழவர் பெருவிழா நடந்தது.

தமிழக வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது:

தமிழத்தில் 16,000 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்து வருகிறது. விவசாயிகளை, வேளாண் அதிகாரிகளே நேரில் சந்தித்து, துறைசார்ந்த திட்டம், சலுகை, மானியம், தொழில்நுட்ப விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில், உழவர் விழாக்கள் நடத்தப்படுகின்றன.

பயிர்பாதுகாப்பு, மண்பரிசோதனை உள்ளிட்ட தொழில்நுட்ப விபரங்களை தொடுதிரை மூலம் நாம் தெரிந்து கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக, சென்னை நீங்கலாக, அறிவிக்கப்பட்ட 31 வறட்சி மாவட்டங்களில், மொத்தம் 1,350 கோடிக்கு மேல் வறட்சி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே, கடந்த ஆண்டில், தமிழகம் அதிக அளவில் 101 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

இதற்காக மத்திய அரசு விருதும்,

2 கோடி நிதியும் கொடுத்து தமிழக அரசை கவுரவப்படுத்தியுள்ளது.

நடப்பாண்டு பட்ஜெட்டில், வேளாண்மைதுறைக்கு, 5,181 கோடி ரூபாயை முதல்வர் ஒதுக்கியுள்ளார்.

இவ்வாறு, அவர் பேசினார்.

வேளாண்மை இணை இயக்குனர் லட்சுமி, எம்.எல்.ஏ.,வேலுமணி, கலெக்டர் கருணாகரன் <உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். வேளாண்மை உதவி இயக்குனர் வசந்தரேகா நன்றி கூறினார்.

"வறட்சியை தாங்கும் தென்னை ரகங்கள் ஆராய்ச்சி நிலையத்தில் இருப்பு வைப்பு'

உடுமலை:""வறட்சியை தாங்கி வளரும் தென்னை ரகங்கள் கண்டறியப்பட்டு, விவசாயிகள் தேவைக்காக ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது," என ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சீனிவாசன் பேசினார். உடுமலை அருகே பெரியகோட்டை கிராமத்தில், வட்டார வேளாண் விரிவாக்க மையம் சார்பில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி துணை தலைவர் சுப்பிரமணியம் தலைமை வகித்தார். உதவி இயக்குநர் மகாலிங்கம் முன்னிலை வகித்தார். ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சீனிவாசன் பேசியதாவது: ஆழியாறு ஆராய்ச்சி நிலையத்தில், தென்னை விவசாயிகள் நலனுக்காக பல புதிய ரக தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது, வறட்சியை தாங்கி வளரும் டிப்தூர் நெட்டை மற்றும் அரசம்பட்டி நெட்டை ஆகிய இரண்டு ரகங்கள் மையத்தில் விவசாயிகளுக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தென்னையில், 5 முதல் 6 வயது வரை காண்டாமிருக வண்டு தாக்குதல் காணப்படும். இவ்வண்டு, குருத்தை ஆங்கில, எழுத்து "வி' வடிவில்,
கத்தரிப்பதே நோய் தாக்குதலின் அடையாளமாகும். இளங்குருத்தில், 2 மாதங்களுக்கு ஒரு முறை இரண்டு நாப்தலீன் உருண்டைகளை இட வேண்டும். மேலும், "போரேட்' என்ற குருணை மருந்தினை ஒரு மரத்திற்கு 10 கிராம் என்ற அளவில் பொட்டலத்தில் இட்டு, அதை துளையிட்டு, குருத்தில் செருகி வைக்க வேண்டும்.

கருந்தலைப்புழுவை கட்டுப்படுத்த தென்னை ஆராய்ச்சி நிலையத்தில், ஒட்டுண்ணி கிடைக்கிறது. ரசாயன முறைக்கு மாற்று முறையாக உயிரியல் முறையில், நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறையாக உள்ளது. மேலும், அடித்தண்டு அழுகல், குருத்தழுகல் நோயை கட்டுப்படுத்தும், சூடோமோனஸ் மற்றும் டிரைகோடெர்மா பூஞ்சாண கொல்லிகள் ஆராய்ச்சி நிலையத்தில் கிடைக்கிறது. சிவப்பு கூன் வண்டு மற்றும் காண்டாமிருக வண்டுகளை 'கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்துகளை தவிர்த்து, இனக்கவர்ச்சி பொறிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம் இவ்வாறு பேசினார்.

பாசன சபை தலைவர் செல்வராஜ், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை வேளாண் அலுவலர் திருமகள்ஜோதி உட்பட பலர் பேசினர். உதவி வேளாண் அலுவலர் அமல்ராஜ் நன்றி தெரிவித்தார்.

**நாட்டின் சர்க்கரைஉற்பத்தி 2.45 கோடி டன்**



புதுடில்லி:நாட்டின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு பருவத்தில், சென்ற ஏப்ரல் மாதம் வரையிலான காலத்தில், 2.45 கோடி டன்னாக சரிவடைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 3 சதவீதம் குறைவாகும் என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது.மதிப்பீட்டு காலத்தில், மகாராஷ்டிராவின் சர்க்கரை உற்பத்தி, 79.70 லட்சம் டன்னாகவும், உத்தர பிரதேசத்தின் சர்க்கரை உற்பத்தி, 74.30 லட்சம் டன்னாகவும் உள்ளது.

மேலும், கர்நாடகாவின் சர்க்கரை உற்பத்தி, 33.60 லட்சம் டன்னாக சற்று குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 37.20 லட்சம் டன்னாக அதிகரித்து காணப்பட்டது. இதே போன்று தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி, ஒரு சதவீதம் குறைந்து, 15.70 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. இது தவிர, ஆந்திர மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தியும், 11.10 லட்சம் டன்னிலிருந்து, 9.90 லட்சம் டன்னாக குறைந்துள்ளது என, "இஸ்மா' மேலும் தெரிவித்துள்ளது.

**நோய் தாக்குதலால் ரோஜா உற்பத்தி பாதிப்பு**



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரோஜா செடிகளில், "மைட்ஸ்' நோய் தாக்குதல் தீவிரம் அடைந்துள்ளதால், மலர் உற்பத்தி வீழ்ச்சியடைந்து, ரோஜா மலர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.கிருஷ்ணகிரி :ஆசியாவில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிகளவு ரோஜா மலர் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டம் முழுவதும் திறந்த வெளி மற்றும் பசுமை குடோன் முறையில், 5,000 ஏக்கரில் விவசாயிகள் ரோஜா மலர் சாகுபடி செய்துள்ளனர்.

திறந்த வெளி சாகுபடியில் உற்பத்தி செய்யப்படும் பட்டன் ரோஸ், வடமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்ட மலர் சந்தைகளுக்கு விழாக்கள், முகூர்த்த நிகழ்ச்சிகளை குறி வைத்து விவசாயிகள் விற்பனைக்கு அனுப்புகின்றனர்.பசுமை குடோன்களில் சாகுபடி செய்யப்படும் தாஜ்மகால், கிரான்ட் கலா, பஸ்ட்ரெட், எல்லோ, பிங், ஆரஞ்ச், ஒயிட் உள்ளிட்ட உயர் ரக ரோஜா மலர்களை வியாபாரிகள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, பெங்களூரு, ஐதராபாத், சென்னை, மும்பை, டில்லி மற்றும் வெளிநாடுகளுக்கு ஆண்டு முழுவதும் ஏற்றுமதி செய்கின்றனர். தற்போது, வறட்சியால் தண்ணீர் கிடைக்காமல் ரோஜா செடிகளில் உற்பத்தியாகும் மலர்கள் தரமற்றதாக உள்ளன. செடிகளில், "ரெட் மைட்ஸ்', "பைடர் மைட்ஸ்' ஆகிய நோய் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது.க்ஷ

இந்நோய் தாக்கிய செடிகளில் சிலந்திபேன் பூச்சுகள், இலைகள், பூக்களில் ஊடுருவி, செடியை நாசப்படுத்துகிறது. இலைகளில் உள்ள சாறை உறிஞ்சுகிறது. இதனால், இலைகள், மொட்டுகள் கருகி கீழே உதிர்ந்து விழுகிறது. காம்புகள் சுருங்கி விடுகிறது. மொட்டுகள், விரிந்து வீணாகிறது.கடந்த காலத்தில் காம்புடன் கூடிய ஒரு மலர், 45 செ.மீ., முதல், 50 செ.மீ., வரை, இருந்தது. நோய் தாக்குதலால் பூக்கள் சிறுத்தும், காம்புகள் கட்டையாகவும் உள்ளன. நோய் தாக்குதல், வறட்சியால் மாவட்டத்தில் பட்டன் ரோஸ், ஏற்றுமதி ரக ரோஜாக்கள் உற்பத்தி வீழ்ச்சிஅடைந்து பூக்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெங்களூரு:கடந்த ஒரு வாரமாக, பெங்களூரு சர்வதேச மலர் சந்தையில் ரோஜா மலர் "கிடுகிடு'வென உயர்ந்துள்ளது. கடந்த மாதம், 20 பூக்கள் ஒரு பஞ்ச் ரோஜா மலர்கள் வெறும், 40 ரூபாய் வரைதான் விற்பனையானது.தட்டுப்பாட்டால், ஒரு ரோஜா, 5 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஒரு பஞ்ச் மலர்கள், 100 ரூபாய்க்கு விற்பனையாகிறது.
திடீர் விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும், மைட்ஸ் நோய்

தீவிரமடைந்துள்ளதால், செடிகளை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

ரோஜா மலர் விவசாயிகள் கூறியதாவது:"மைட்ஸ்' நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் பரிந்துரைக்கும் ஒரு லிட்டர் கெமிக்கல் மருந்தை வாரம் இரு முறை அடிக்க வேண்டும். ஒரு லிட்டர் மருந்து அடிக்க 4,000 ரூபாய் செலவாகிறது.
மானியம்:வாரம் இரண்டு முறை மருந்து அடிக்க வேண்டும். ஆனால், அந்தளவுக்கு வருமானம் இல்லை. தற்போது தான் தட்டுப்பாட்டால் பூக்கள் விலை உயர்ந்துள்ளது. ஆனால், நோய் தாக்குதல் மற்றும் வறட்சியால் செடிகளை பராமரிக்க முடியவில்லை. எனவே, தோட்டக்கலைத்துறை, மானிய விலையில் மருந்துகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காய்கறி விலை உயர்வு

சென்னை:அக்னி வெயில் தாக்கம், வெளி மாநில வரத்து குறைவு போன்ற காரணங்களால், காய்கறி விலை மீண்டும் உயர்ந்து உள்ளது.கோயம்பேடு காய்கறி சந்தையில் கடந்த சில நாட்களாக, ஓரளவு குறைந்து காணப்பட்ட, காய்கறி விலை மீண்டும் உயர்ந்து உள்ளது.தற்போது பீன்ஸ் மற்றும் அவரைக்காய் ஒரு கிலோ 50 ரூபாய்க்கும், கேரட் 40 ரூபாய்க்கும், பெல்லாரி வெங்காயம் 25 ரூபாய் வரையும் விற்கப்படுகின்றன. அதேபோல, இதர காய்கறிகளின் விலையும் 10 முதல் 25 சதவீதம் வரை அதிகரித்து உள்ளது.இது குறித்து, கோயம்பேடு சந்தை வியாபாரி ஒருவர் கூறியதாவது:கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை,தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில், பனிப்பொழிவு இருந்ததால், காய்கறி விளைச்சலும், வரத்தும், விலையும் சீரான முறையில் இருந்தது. கோடையின் உக்கிரம் துவங்கிய பின், விளைச்சல் குறைந்ததால், காய்கறி விலை திடீரென உயர்ந்து உள்ளது.இவ்வாறு, அவர்தெரிவித்தார்.

## திருக்கழுக்குன்றத்தில் பூசணி விளைச்சல் அமோகம் ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் லாபம்

மாமல்லபுரம்:நெல்லுக்கு பதிலாக விவசாயிகள் மாற்று பயிராக பூசணிக்காய் வகையை அதிக அளவில் பயிரிடுகின்றனர்.திருக்கழுக்குன்றம் சுற்றியுள்ள கிராமங்களில் ஏரிகள் மற்றும் பாலாற்று படுகையால் நீர் வளம் மிகுந்தது. இங்கு நெல், கரும்பு, தர்பூசணி போன்ற பயிர்கள் விளைச்சல் அதிகமாக <உள்ளது. இங்குள்ள விவசாயிகள் கோடைக்காலங்களில் மாற்று பயிர்களை ஆர்வமாக செய்து வருகின்றனர்.கோடை கால பயிர்கோடை கால தேவைக்காக, தர்பூசணி பயிரிட்டு அறுவடை செய்த விவசாயிகள், தற்போது பூசணிக்காய் பயிரிட்டுள்ளனர். பூசணிக்காய் சாகுபடி செய்தால், மூன்று மாதத்தில் அறுவடை செய்யலாம்.இதுகுறித்து, கம்பையாபுரம்

விவசாயி ராஜசேகர் கூறியதாவது:பதப்படுத்திய பூசணி விதைகள், பல்வேறு எடை அளவுகளில் (100 கி. விதை, 250 ரூபாய்), உரக்கடைகளில் கிடைக்கின்றன. தேவைக்கேற்ப, ஒரு ஏக்கருக்கு, அதிகபட்சம் 600 கிராம் என்ற அளவில், விதைகளை வாங்கி, விதைக்க வேண்டும்.விதைக்கும் முன்பு, நிலத்தை உழுது, இயற்கை உரம் மற்றும் ரசாயன உரம் இட்டு, நீர் பாய்ச்சி, விதை ஊன்றப்படுகிறது. மூன்றே நாளில், விதை முளைத்து, செடி மற்றும் களைகள் உருவாகின்றன. களையை அகற்றி, மீண்டும் உழுது, நீரை தேக்கும் வகையில், பாத்தி கட்ட வேண்டும்.மூன்று மாதங்களில்...நிலம் ஈரப்பதத்திற்காக, நான்கு நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சி, உரமிடுவது அவசியம். விதைக்கப்பட்ட நாளில் இருந்து, 35வது நாளில், பூ பூக்கும் அடுத்த சில நாட்களில் பிஞ்சு காய்த்து, நாளடைவில் பெருக்கும். மூன்றே மாதத்தில் அறுவடை செய்யலாம்ஒரு ஏக்கர் பூசணிக்காயை பயிரிட, அதிகபட்சமாக 15,000 ரூபாய் செலவாகும். ஒரு ஏக்கரில், 15 டன் வரை பூசணிக்காய் அறுவடை செய்யலாம். மழை பெய்யாமல் இருந்தால், கூடுதல் விளைச்சல் இருக்கும்.தற்போது, சமையல் பூசணி மற்றும் திருஷ்டி பூசணி என, பயிரிட்டுள்ளனர். வெளி மாவட்ட மொத்த வியாபாரிகள், இங்கு நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். முதல்முறையாக 4 ஏக்கரில், பூசணி பயிரிட்டுள்ளேன். 60 ஆயிரம் ரூபாய் வரை செலவானது. விளைச்சலை பொறுத்து, 40 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறேன் என்றார்.

### ஆத்மா திட்டம் "சபாஷ்' வாங்கும் விவசாயிகளுக்கு காத்திருக்கு பரிசு

சுங்குவார்சத்திரம்:விவசாயம், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில், சிறப்பாக செயல்படும் விவசாயிகள், ஊக்கப்பரிசு பெறலாம் என, தோட்டக்கலை துறை அறிவித்துள்ளது.10 விவசாயிகளுக்கு பரிசுஇதுகுறித்து, ஸ்ரீபெரும்புதூர் வட்டார வேளாண்மை தோட்டக்கலை உதவி இயக்குனர் ராணி கூறியதாவது:ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், ஆத்மா திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும், 10 விவசாயிகளுக்கு, சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்படி, விவசாயம், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில், சிறப்பாக செயல்படும் விவசாயிகளுக்கு, ஊக்கப்பரிசு வழங்கப்படுகிறது.கடந்த நிதியாண்டில், தோட்டக்கலை சார்பில், இருவருக்கு, ஊக்கப்பரிசு தலா, 4,000 ரூபாய் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்களது நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட, பயிருக்கான திட்ட மதிப்பீடு, திட்ட அறிக்கை ஆகியவற்றை அளிக்க வேண்டும். சிறப்பாக சாகுபடி செய்யும் விவசாயிக்கு, ஊக்கப்பரிசு வழங்கப்படும். விவசாயத்தை ஊக்குவிக்க, மத்திய அரசால் இந்த பரிசு வழங்கப்படுகிறது.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.சுங்குவார்சத்திரம் அடுத்த,

பட்டுமுடையார்குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் பாலு. இவர், கடந்த, 50 ஆண்டுகளாக, விவசாயம் செய்து வருகிறார். இவர், சம்பங்கி சாகுபடியில் சாதனை படைத்ததால், ஆத்மா திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டிற்கான, 4,000 ரூபாய் ஊக்கப் பரிசை பெற்றுள்ளார்.சம்பங்கி சாகுபடிஇதுகுறித்து, விவசாயி பாலு கூறியதாவது:எங்கள் கிராமத்தில், பெரும்பாலான விவசாயிகள், காய்கறி, மல்லிப்பூ செடி பயிரிடுகின்றனர். நான், முதன்முறையாக, சம்பங்கி பூச்செடி நடவு செய்ய திட்டமிட்டேன். அதற்காக, தோட்டக்கலை விவசாயத் துறை அதிகாரிகளை அணுகினேன். அவர்கள் கொடுத்த வழிகாட்டுதல் படி, சம்பங்கி பூச்செடி சாகுபடியில் இறங்கினேன்.செடிகள், மூன்றாவது மாதத்தில் பூக்க துவங்கின. தொடர்ந்து, 2 ஆண்டுகள் வரை, நன்கு பூத்து லாபத்தை கொடுத்து வந்தது. தினமும் அதிகாலையில், ஆட்களை வைத்து, பூக்களை பறித்து விற்பனைக்காக, திருவள்ளூர் உழவர் சந்தையில் விற்பனை செய்தேன். தினமும், 10 கிலோ சம்பங்கி பூ கிடைத்தது. திருமணம் மற்றும் விசேஷ நாட்களில், 1 கிலோ, 100 முதல் 150 ரூபாய் வரை, விலை போகும்.ஒரு சில நாட்களில், 40 ரூபாய்க்கும் விற்க வேண்டி வரும். சம்பங்கி சாகுபடி செய்தால், குறைந்த செலவில், அதிக லாபம் கிடைக்கும்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

### தனியாரிடம் நெல்லை விற்க விவசாயிகள்... நாட்டம் கொள்முதல் மையங்கள் புறக்கணிப்பு

காஞ்சிபுரம்:அறுவடையான நெல்லை, சுத்தப்படுத்தி தர வேண்டும் என்று நிபந்தனை இருப்பதால், அரசு கொள்முதல் மையங்களை புறக்கணிக்கும் விவசாயிகள், எந்த நிலையில் இருந்தாலும், வாங்கி கொள்ளும் மொத்த வியாபாரிகளிடம், நெல்லை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த 2012ம் ஆண்டில், 22 ஆயிரம் ஹெக்டரில் நெல் பயிரிடப்பட்டது. பருவ மழை பொய்த்ததால், கடந்த நவரை பருவத்தில் 18,000 ஹெக்டர் பரப்பளவில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டது.தவிர்ப்புஅறுவடை ஆகும் நெல்லை, விவசாயிகள், எளிதாக விற்பனை செய்வதற்காக, இந்த ஆண்டு, 25 இடங்களில், நெல் கொள்முதல் மையங்களை அரசு திறந்துள்ளது. இந்த மையங்களில், குவிண்டால் 1,350 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இருப்பினும், பல விவசாயிகள், நெல் கொள்முதல் மையங்களில் விற்பனை செய்வதை தவிர்த்து, மொத்த வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகின்றனர்.இது குறித்து, விவசாயி ஒருவர் கூறியதாவது:அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய வேண்டும் என்றால், கருக்காய் தூற்றிவிட்டு சுத்தமாக வழங்க வேண்டும். நெல் போதிய ஈரப்பதமின்றி, காய்ச்சலாக இருக்க வேண்டும். நெல்லை தூற்றி சுத்தப்படுத்தும்போது, 40 கிலோ எடை கொண்ட மூட்டைக்கு, 4 கிலோ, கருக்காய் கழிவு போகிறது.அதேவேளையில், அறுவடை

செய்யப்பட்ட நெல், எந்த நிலையில் இருந்தாலும், மொத்த வியாபாரிகள் எடுத்துக் கொள்கின்றனர். சிக்கல்கள்ஒரு மூட்டைக்கு இரண்டு கிலோ மட்டுமே கழிக்கின்றனர். இது ஒருவகையில் லாபமாக இருப்பதால், சில விவசாயிகள், தனியாரிடம் நெல் விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேலும், நெல்லை காய வைத்து கொடுப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. குறிப்பாக, கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. காய வைக்க இட வசதியும் குறைவு.இவ்வாறு, அவர் கூறினார்.தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:நெல் காய்ச்சல் இருந்தால் தான், நீண்ட காலத்திற்கு இருப்பு வைக்க முடியும். இதனால் தான், கொள்முதல் செய்யும்போதே காய்ச்சல் உள்ளதாக இருக்க வேண்டும் என, நிபந்தனை விதிக்கப்படுகிறது. மேலும், நெல்லை சுத்தமாக தூற்றி வழங்குவதற்கு அறிவுறுத்துகிறோம். இதை பின்பற்றாத சில விவசாயிகள், தனியார் நெல் விற்பனை நிலையங்களுக்கு விற்று வருகின்றனர்.சில விவசாயிகள், நெல் பயிரிட தொடங்குவதற்கு முன்பே தனியாரிடம் முன் பணம் பெற்று விடுகின்றனர். இதனால், அறுவடையின் போது, நெல்லை அவர்களிடமே கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இப்படி ஒரு வழி இருக்கு!

அறுவடை செய்யப்பட்ட நெல்லை, அரசு கொள்முதல் மையங்களிலும் விற்காமல், தனியாரிடமும் கொடுக்காமல், சந்தையில் விலை ஏறும் போது விற்பனை செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில், சில விவசாயிகள் இருப்பு வைக்கின்றனர். களங்களிலும், சாலை ஓரங்களிலும் நெல்லை குவித்து, தார் பாய் போட்டு பாதுகாக்கின்றனர். இதுகுறித்து, வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூட உயரதிகாரி ஒருவர் கூறியதாவது:விலை குறையும் நேரங்களில், இருப்பு வைத்து விற்பனை செய்வதற்கு தான், வேளாண் துறையில் சார்பில், ஒழுங்குமுறை விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டன. இங்கு, சந்தை விலை குறையும் போது, விவசாயிகள், தங்கள் விளைபொருட்கள் மீது இருப்பு ஈட்டுக் கடன் பெறலாம். பின், விலை ஏறும்போது, ஈடு வைத்த நெல்லை மீட்டு, விற்பனை செய்து கொள்ளலாம். இந்த வாய்ப்பினை பெரும்பாலான விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

**தியாகதுருகம் பகுதி உழவர் பெருவிழாவில் தோட்டக்கலைத் துறையினர் "ஆப்சென்ட்'**

தியாகதுருகம்:தியாகதுருகம் ஒன்றியத்தில் நடக்கும் உழவர் பெருவிழாவில் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கலந்து கொள்வதை திட்டமிட்டு புறக்கணித்து வருவதால் இத்துறை சார்ந்த அரசு திட்டங்களை விவசாயிகளுக்கு விளக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தியாகதுருகம் ஒன்றியத்தில் 40 ஊராட்சிகளிலும் உழவர் பெருவிழா கடந்த சித்திரை 1ம் தேதி துவங்கி நடந்து வருகிறது. இவ்விழாவில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு, வேளாண் துறைமூலம் அரசு வழங்கியுள்ள சலுகைகள், மானியங்கள், திட்டங்கள், தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக விளக்கப்படுகிறது. மேலும் விவசாயிகளுக்கு இடுபொருட்கள், உரம், விதை, நவீன கருவிகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

இதற்காக வேளாண் துறையுடன் சார்ந்த தோட்டக்கலை, விதைஆராச்சி, தொழில்நுட்பம், கால்நடை மருத்துவம், மண்பரிசோதனை உள்ளிட்டவைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் கிராமத்து மக்களை எளிதில் சென்றடையும் வகையில் கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. தினமும் ஒன்று அல்லது இரண்டு ஊராட்சிகளில் உழவர் பெருவிழா செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தியாகதுருகம் பகுதியில் நடக்கும் விழாவில் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கலந்து கொள்வதை திட்டமிட்டு புறக்கணித்து வருகின்றனர். இதனால் அந்த துறை மூலம் அரசு வழங்கும் சலுகைகள், திட்டங்களை மக்கள் அறிந்துகொள்ள முடியாமல் போகிறது. தியாகதுருகம் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக காய்கறி, பூச்செடிகள் பயிரிட்டு லாபம் ஈட்டுவதில் விவசாயிகள் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் உழவர் பெருவிழாவில் தோட்டக்கலைத்துறை குறித்து விளக்கம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வரும் விவசாயிகள் ஏமாற்றமடைகின்றனர். எந்த ஊரில் நடக்கும் விழாவில் அமைச்சர், எம்.எல்.ஏ., கலந்து கொள்கிறார்களோ அங்கு மட்டும் தோட்டக்கலைத்துறையினர் தவறாமல் சென்று கணக்கு காண்பித்து விட்டு வந்து விடுகின்றனர். தியாகதுருகத்திற்கு அருகில் எளிதாக சென்று வரும் தொலைவில் உள்ள ஊர்களில் மட்டும் சம்பிரதாயத்திற்கு கலந்து கொள்கின்றனர். இதனால் தோட் டக்கலைத் துறையின் திட்டங்கள் விவசாயிகளுக்கு சென்றடைவ தில் பின்னடைவு ஏற்பட்டுள் ளது. பெரும் பொருட்செலவில் விவசாயிகளின் நலன் கருதி அரசு நடத்தும் உழவர் பெருவிழாவில் கலந்து கொள்ளாமல் புறக்க ணித்து வரும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மீது கலெக் டர் சம்பத் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கருந்தலாக்குறிச்சியில் உழவர் பெருவிழா

சின்னசேலம்:சின்னசேலம் அருகே கருந்தலாக்குறிச்சி கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது. சின்னசேலம் அருகே கருந்தலாக்குறிச்சி ஊராட்சி தொடக்கப் பள்ளியில் நடந்த நிகழ்ச்சிக்கு வேளாண் உதவி இயக்குனர் கோவிந்தன் தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் அருவஞ்சகம் முன்னிலை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மவிசுதா வரவேற்றார். வேளாண் திட்டங்கள் குறித்து வேளாண் அலுவலர் வேல்முருகன் பேசினார்.

கிராமிய நாடகம் மூலம் விவசாயிகளுக்கு, தாவரங்களுக்கு பயன்படும் உரம், பூச்சிமருந்து உள்ளிட்டவைகள் பற்றி கூறப்பட்டது. தோட் டக்கலை, வேளாண் விற்பனை, வேளாண்

பொறியல் துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டு பேசினர்.
உதவி வேளாண் அலுவலர்கள் துரை, ரஜினிகாந்த், தங்கதுரை, ஆரோக்கியசாமி, தியாகராஜன், முருகேசன், பொருள் சிறப்பு அறிஞர்கள் அருள், ஜெயபாலன் மற்றும் விவசாயிகள் பயனடைந்தனர்.

**தியாகதுருகத்தில் உழவர் பெருவிழா**

தியாகதுருகம்:தியாகதுருகம் ஒன்றியத்தில் உள்ள கூந்தலூர், குருபீடபுரம் ஆகிய ஊராட்சிகளில் உழவர் பெருவிழா நடந்தது.
விழாவிற்கு ஒன்றிய சேர் மன் பச்சையம்மாள் வைத்திலிங்கம் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர்கள் அய்யப்பா, ராமன் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் ராமச்சந்திரன் வரவேற்றார். விவசாயிகளுக்கு அரசு வழங்கும் சலுகைகள், மானி யங்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து கிருஷ்ணகுமாரி, ராஜன், முத்துசாமி ஆகியோர் விளக்கினர். இடுபொருட்கள், வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஊராட்சி தலைவர்கள் செல்வராஜ், சாரதா பார்த்தீபன், துணைத்தலைவர் சந்தானம் கலந்துக் கொண்டனர்.

**எஸ்.வி.பாளையத்தில் உழவர் பெருவிழா**

சங்கராபுரம்:சங்கராபுரம் வட்டம் எஸ்.வி.பாளையத்தில் வேளாண்துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது.
ஊராட்சி தலைவர் ஜெயலட்சுமி கண்ணாயிரம் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக் குனர் ராமசாமி, தியாகராஜபுரம் ஊராட்சி தலைவர் பரமேஸ்வரி திருப்பதி முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் விஜயகுமார் வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் முத்துகிருஷ்ணன், வேளாண்மை உதவி அலுவலர்கள் அப்பாஸ், பழனிவேல், மைக்கேல், நாசர், ஜெயபிரதா, வேளாண் பொறியியல் துறை இளங் கோவன், தொட்டக் கலைத் துறை உதவி வேளாண் அலுவலர் பரசுராமன், வேலன் பேசினர். மண் மாதிரி, விதைநேர்த்தி போன்ற செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. விவசாயிகளின் அடிப்படை புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டது. ஆத்மா திட்ட வட்டார மேலாளர் தேவி, தொழில்நுட்ப வல்லுனர் தியாகநாதன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி வேளாண் அலுவலர் ஜெயகுமார் நன்றி கூறினார்.

**பாமாயில் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்: குறைந்த மனித சக்தியில் அதிக பலன்**

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் நவீன தொழில் நுட்பத்தில் குறைந்த மனித சக்தியில் அதிக பலன் தரக்கூடிய மாற்று பயிரான பாமாயில் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அனைத்து துறைகளிலும் வியக்கதக்க வளர்ச்சி கண்டு வரும் இந்தியா விவசாய துறையில் தற்போது குறிப்பிட்டு சொல்லும்படியான வளர்ச்சி கண்டுள் ளது. 6 மாதத்தில் பலன் தரக்கூடிய பயிரிட்டு வந்த நம் முன்னோர்கள் வரகு, சோளம், கேழ்வரகு, துவரை, தட்டை போன்றவற்றை பயிரிட்டு பசியை போக்கினர்.

இந்த நிலை மாறி குறுகிய கால நெற்பயிர்களை பயிரிட துவங்கியதிலிருந்து இந்தியா விவசாயத்தில் தன்னிறைவு அடைந்தாலும் லாபம் இல்லாத தொழிலாகவே விவசாயம் கருதப்பட்டு வந்தது.

அதிக பலன்

வேகமாக மாறிவரும் நவீன யுகத்தில் ஆள் பற்றாக்குறை, கூலி உயர்வு, பூச்சி தொல்லை, மின் தடை இவை அனைத்துக்கும் ஈடு கொடுத்து கடன் வாங்கி பயிர் செய்து சந்தைக்கு கொண்டு சென்றால், விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல் விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. நெல், கரும்பு என மாற்றி, மாற்றி பயிர் செய்து நஷ்டத்தை விவசாயிகள் சந்தித்தனர்.

பாமாயில்

மத்திய மாநில அரசுகள் மானியத்துடன் நீண்ட நாள் பயன்தரக்கூடிய மாற்று பயிர்கள் பயிர் செய்வதற்கு ஆலோசனையும், ஊக்கத்தையும் அளித்து வருகிறது. இதனால் அதிக மனித உழைப்பு, குறைந்த பலன் தரக்கூடிய நெல், கரும்பு, மணிலா, கேழ்வரகு பயிர் செய்வதை விவசாயிகள் தவிர்த்து, நவீன தொழில் நுட்பத்தில் குறைந்த மனித சக்தியில் அதிக பலன் தரக்கூடிய மாற்று பயிரான பாமாயில் மரம் வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எஸ்.குளத்தூரை சேர்ந்த விவசாயி சந்திரசேகரன் கூறுகையில், ஆள் பற்றாக்குறையால் விவசாய பணிகளை மேற்கொள்ள முடிவதில்லை. இதனால் அதிக செலவில் லாத பாமாயில் மரக்கன்றுகளை நடவு செய்ய முடிவு செய்து பாமா யில் மர கன்றுகளை நட்டு பராமரித்து வருகிறேன். இரண்டரை ஆண்டுகளில் பலன் தரக்கூடிய இதனை காவேரி பாமாயில் நிறுவனத்தினர் கொடுக்கின்றனர். அனைத்து வகை நிலங்களிலும் செழித்து வளரும் தன்மை கொண் டதால் இரண்டு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்துள்ளேன் என்றார்.

விவசாயம் என்றால் நெல், கரும்பு, மணிலா என்றில்லாமல் அதிக லாபம் தரக்கூடிய மாற்று பயிரான பாமாயில் சாகுபடியில் சங்கராபுரம் பகுதி விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

**மேட்டூரில் மழை கோடை சாகுபடிக்கு உழவுப்பணி துவக்கம்**

மேட்டூர்: மேட்டூர் சுற்றுப்பகுதியில் பரவலாக மழை பெய்ததை தொடர்ந்து, விவசாயிகள் கோடை சாகுபடியை துவங்கியுள்ளனர்.

மேட்டூர் சுற்றுப்பகுதியில், நேற்று முன்தினம் சூறைக்காற்றுடன், 16.6 மி.மீ., மழை பெய்தது.

மழையால் மேட்டூர் அணையின் வறண்ட நீர்பரப்பு பகுதி மற்றும் சாகுபடி நிலங்களில் ஈரப்பதம் அதிகரித்தது.
இதனால், நேற்று விவசாயிகள் ஈரப்பதத்துடன் இருந்த நிலத்தை டிராக்டர் மூலம் உழுது எள், சோளம் உள்ளிட்ட விதைகளை தூவினர். கோடை காலத்தில், அவ்வப்போது மழை பெய்து, மண் ஈரப்பதமாக மாறினால் போதும். செடிகள் நன்கு வளர்ந்து பலன் கொடுக்கும், என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**பாரம்பரியமிக்க வேளாண் பொருட்கள் விழிப்புணர்வு: மாணவர்கள் பங்கேற்பு**

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் துறை சார்பில், பாரம்பரியம் மிக்க வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் உணர்த்துவம் வகையில், விழிப்புணர்வு பேரணி, ஆண்டகளூர்கேட்டில் நடந்தது. வேளாண் உதவி இயக்குணர் வருதராஜூ தலைமை வகித்தார். ராசிபுரம் யூனியன் சேர்மன் லட்சுமி முன்னிலை வகித்தார். மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் ராஜேஸ்வரி, பேரணியை துவக்கி வைத்தார். ஆண்டகளூர்கேட் வெங்கடேஸ்வரா நடுநிலைப்பள்ளியில் துவங்கிய பேரணி, முக்கிய சாலைகள் வழியாக சென்று, மீண்டும் பள்ளியில் முடிவடைந்தது.
பேரணியில், வேளாண் பொருட்களான இளநீர், சீயக்காய், பருத்தி மற்றும் சிறு தானியங்கள் குறித்தும், அதன் நன்மைகள், அவற்றை பயிரிடுவது பற்றியும் விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட்டது. வேளாண் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் உள்பட, 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.
* முருங்கப்பட்டி ஊராட்சி துவக்கப்பள்ளியில், உழவர் பெருவிழா நடந்தது. வேளாண் அலுவலர் ஜெயமாலா வரவேற்றார். மண் மாதிரி எடுத்தல், பாசிப்பயறு விதை நேர்த்தி செய்தல், வெங்காயம் விதை நேர்த்தி, மினி டிராக்டர் மற்றும் நிலக்கடலை தரம் பிரித்தல் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.
தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார், கால்நடை உதவி மருத்தவர் டாக்டர் ரம்யா, இளநிலை பொறியாளர் உதயக்குமார், வேளாண் உதவி அலுவலர் சுப்ரமணி, அலுவலர்கள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.
* நாமகிரிப்பேட்டை அடுத்த கார்கூடல்பட்டியில் நடந்த உழவர் பெருவிழாவுக்கு, பஞ்சாயத்து தலைவர் சிவபிரகாஷம் தலைமை வகித்தார். அட்மா திட்ட தலைவர் சரவணன் வரவேற்றார். வேளாண், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, பட்டு வளர்ச்சி, வேளாண்மை அறிவியல் நிலையம் உட்பட பல்வேறு துறைகள் பங்கேற்று, மானியத் திட்டம், தொழில் நுட்பங்கள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

**பருவமழை பொய்த்ததால் கருகிய கரும்பு பயிர்கள்**

சேந்தமங்கலம்: பருவமழை பொய்த்து போனதால், சேந்தமங்கலம் பகுதியில் சாகுபடி செய்துள்ள கரும்பு பயிர்கள் கருகி, விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

சேந்தமங்கலம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில், கரும்பு, மரவள்ளி போன்ற பயிர்கள், அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போனதால், அங்குள்ள நீராதாரங்களான ஏரி, குளம், குட்டை, கிணறு ஆகியவை வற்றியது.

மேலும், நிலத்தடி நீரும் குறைந்தது. அதனால், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு, போதிய அளவு நீர் பாய்ச்ச வழியில்லாமல் போனது. அதன் காரணமாக, அனைத்து பயிர்களும் காய்ந்து கருகி, விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல், ஆடு, மாடு போன்ற கால்நடைகளும் தண்ணீரின்றி அவதிப்படுகின்றன.

கால்நடைகள் மற்றும் மக்கள் பயன்பாட்டுக்கு, பல கி.மீ., தூரம் சென்று, தண்ணீர் எடுத்து வரும் நிலை உள்ளது.

**வேளாண் கூட்டமைப்பு மூலம் விவசாய தொழில் துவங்க கலெக்டர் வேண்டுகோள்**

கிருஷ்ணகிரி: "சிறு விவசாயிகள், வேளாண் வணிக கூட்டமைப்பின் மூலம் விவசாயம் சார்ந்த தொழில்களை துவங்க முன்வர வேண்டும்' என்று கலெக்டர் ராஜேஸ் தெரிவித்துள்ளார்.

சிறு விவசாயிகள் வேளாண்மை கூட்டமைப்பு சார்பில், தொழில் முனைவோர் மற்றும் முன்னோடி விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடந்தது.

கலெக்டர் ராஜேஸ் தலைமை வகித்தார்.

வேளாண்மை துணை இயக்குனர் பூபதி வரவேற்றார். வேளாண் நிதி நிறுவன திட்ட அலுவலர் நிதிஷ்சர்மா, வேளாண் வணிக கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஆகியோர் திட்ட விளக்கவுரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் கலெக்டர் ராஜேஸ் பேசியது:

சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு என்பது இந்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும் ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனம் புதிய வேளாண்மை தொழில் திட்டங்களை தொடங்க முதலீடு செய்து அதன் மூலம் கிராம புற வேலை வாய்ப்பு மற்றும் வருவாயை பெருக்கிட வழிவகை செய்கிறது.

மேலும், இந்நிறுவனம் நிதியினை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக கடனாகவும், தொழில் முதலீட்டாகவும் பயனாளிகளுக்கு வழங்குகிறது. இதற்காக விவசாயிகள் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் வேளாண் பட்டதாரிகளை இந்நிறுவனம் திட்ட செயலாக்கத்தில் ஈடுபட செய்கிறது.

தொழில் முனைவோருக்கு, குளிர் பதன கிடங்குகள் அமைத்தல், மாம்பழச்சாறு எடுத்து அதனை பதப்படுத்துதல், மலர்களிலிருந்து வாசனை திரவியங்கள் தயாரித்தல், காட்டு மரங்களில் இருந்து கோந்து மற்றும் பிசின் தயாரித்தல், வண்ண மீன்கள் வளர்த்தல், தேனி வளர்த்தல் ஆகிய

வேளாண் சார்ந்த தொழில் தொடங்க பயிற்சி அளிக்கப்படுகிறது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுவதால், மாம்பழச்சாறு எடுத்து அதனை பதப்படுத்தும் தொழில்கள் தொடங்கவும், குளிர்பதன கிடங்குகள் அமைத்து விவசாய பொருட்களை சேமித்து வைத்து நல்ல விலைக்கு விற்பனை செய்யவும் இத்திட்டத்தினை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம்.
இவ்வாறு கலெக்டர் பேசினார்.
தோட்டக்கலை துறை இணை இயக்குனர் பெரியசாமி, கிருஷ்ணகிரி வனவியல் விரிவாக்க அலுவலர் பழனிசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்பையா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் மேகநாதன் நன்றி கூறினார்.

## உழவர் பெருவிழாவை புறக்கணித்த விவசாயிகள்

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தின் உரிமையை நிலைநாட்ட கோரி, கோபியில் நடந்த உழவர் பெருவிழாவை விவசாயிகள் புறக்கணிப்பு செய்தனர்.
வேளாண்மை துறை சார்பில் கோபியில் உழவர் பெருவிழா நடந்தது.
உழவர் பெருவிழாவில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டு,செயல்முறை விளக்கங்களை கவனித்தனர்.
தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தின் உரிமை மீட்க கோரி, விவசாய சங்க பிரதிநிதிகள் பிரதாபன், தளபதி உள்பட, 20 க்கும் மேற்பட்ட விவசாயிகள் புறக்கணிப்பு செய்தனர்.
விவசாயிகள் கூறியதாவது:
தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனம், 400 ஆண்டு பழமை வாய்ந்த பாசனமாகும். ஆண்டுக்கு, 300 நாட்களுக்கு தண்ணீர் கிடைத்து வந்த நிலையில், காவிரி நடுவர் மன்ற தீர்ப்பால், 65 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் கிடைக்க கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தின் உரிமை மீட்க வேண்டும் என கோபியில் மிகப்பெரிய பேரணி நடத்தினோம்.
ஆனால், அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
பாசன உரிமை நிலை நாட்ட கோரி, விழாவை புறக்கணிப்பு செய்கிறோம், என்றனர்.

## உழவர் பெருவிழாவில் இடுபொருட்கள் 42 லட்சம் மதிப்பில் எம்.எல்.ஏ., வழங்கல்

கோபிசெட்டிபாளையம்: கோபியில் நடந்த உழவர் பெருவிழாவில், 42 லட்சம் மதிப்பில் விவசாய இடுபொருளுக்கான மானியத் திட்டங்களை, எம்.எல்.ஏ., செங்கோட்டையன் வழங்கினார்.
கோபி வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா கோபியில் நடந்தது. வேளாண்மை துறை துணை இயக்குனர் மாரியப்பன் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் ஆசைதம்பி வரவேற்றார்.

அந்தியூர் எம்.எல்.ஏ., ரமணீதரன் முன்னிலை வகித்தார்.

எம்.எல்.ஏ., செங்கோட்டையன் தலைமை வகித்து, மானியத்தொகையை வழங்கி பேசுகையில், "பருவமழை பொய்த்ததால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., வாய்க்காலில் தண்ணீர் இல்லை. விவசாயிகளை காக்க, 32 மாவட்டங்களில் நிலவரி ரத்து செய்து, தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். தடப்பள்ளி, அரக்கன்கோட்டை விவசாயிகளின் பிரச்னைகளை தமிழக முதல்வர் தீர்த்து வைப்பார்,' என்றார்.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம், தீவிர தானிய உற்பத்தி திட்டம் அரிசி, தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலை துறையில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய நுண்ணீர் பாசன இயக்கம், பந்தல் காய்கறி திட்டத்தின் கீழ், 68 விவசாயிகளுக்கு, 42 லட்சத்து, 26ஆயிரம் ரூபாய் மதிப்பில் மானியத்தொகை வழங்கப்பட்டது.

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ச்சிதுறை, கூட்டுறவுத்துறை என, 16 துறைகள் சார்பிலான அதிகாரிகள் கலந்து கொண்டு, செயல் முறை விளக்கம் செய்து காண்பித்தனர். மண் மாதிரிகள் சேகரித்தல், மானியம் குறித்தும், விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடுகளும் வழங்கப்பட்டன.

நகராட்சி தலைவி ரேவதிதேவி, ஒன்றிய செயலாளர்கள் சிறுவலூர் மனோகரன், தம்பி சுப்பிரமணியம், தோட்டக்கலைதுறை உதவி இயக்குனர் பொறுப்பு சுமதி, மாணவரணி பிரினியோ கணேஷ், துணை செயலாளர் அருள்ராமசந்திரா, துணைத்தலைவர் செல்வம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மழையால் தேயிலை வரத்து அதிகம் விலை குறையும் அபாயத்தால் கவலை**

குன்னூர்:தேயிலைக்கு விலை சரிவு ஏற்பட்டு வரும் நிலையில், தற்போது கோடை மழை காரணமாக பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளதால், மேலும் விலை குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.மலை மாவட்டமான நீலகிரியில், மழையின்றி வறட்சி தொடர்ந்த காலத்தில், தேயிலை தோட்டங்களில் உள்ள செடிகளை சிவப்பு நிற சிலந்தி பூச்சிகள் தாக்கின.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக குன்னூர், கோத்தகிரி, மஞ்சூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கோடை மழை பெய்தது. இதனால், சிவப்பு சிலந்திகள் அழிந்தன. மேலும், பசுந்தேயிலை வரத்தும் அதிகரிக்க துவங்கின.விலை சரியும் நிலை தேயிலை வரத்து குறைவாக இருந்ததால், ஏல மையத்தில் தூளுக்கு விலை கூடுதலாக கிடைக்கும். இந்நிலையில், கடந்த பல வாரங்களாக நடந்து வரும் ஏலங்களில், தேயிலையின் விலை தொடர்ந்து சரிந்து வந்தது.

இந்நிலையில், கோடை மழையால் தேயிலை வரத்து அதிகரித்துள்ளதால் தொழிற்சாலைகளில் கொள்முதலில் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

"கோட்டா' முறை அமல்படுத்தப்பட்டுள்ளதால், விவசாயிகள் குறிப்பிட்ட அளவிலான தேயிலையை மட்டுமே தொழிற்சாலைகளுக்கு வினியோகம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பசுந்தேயிலை வீணாகும் அபாயம் உள்ளது.

### தேயிலை தொழிலின் தற்போதைய நிலை விவாதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

ஊட்டி:நீலகிரி தேயிலை தொழிலின் தற்போதைய நிலை குறித்த கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட அனைத்து விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் கூட்டம், ஊட்டியில் நேற்று நடந்தது. முடிவில், விவசாய சங்க கூட்டமைப்பு தலைவர் போஜன், "நெலிகோலு' அறக்கட்டளை தலைவர் தர்மன் கூறியதாவது:

சமீபத்தில், "நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு, உண்மையான சந்தை விலையை வழங்க வேண்டும்' என, சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது. இதன்படி, குன்னூரில் நடந்த கலந்தாய்வில், "சிறு தேயிலை விவசாயிகளுக்கு தேயிலை வாரியம் ஆதரவாக இருக்கும்; தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யாமல், முழுமனதுடன் செயல்படுத்தும்' என, தேயிலை வாரிய தலைவர் பானு நம்பிக்கை தெரிவித்தார்.

தவிர, விவசாயிகளுக்கு சாதகமான அறிக்கையை, தேயிலை வாரியம் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

கருத்தரங்கு

இதற்கிடையில், தேயிலை வாரியம், "நெலிகோலு' அறக்கட்டளை இணைந்து, "சிறு தேயிலை விளைவிப்போர் பார்வையில் வருங்கால தேயிலை வேளாண்மை' என்ற தலைப்பிலான நிகழ்ச்சியை, வரும் 9ம் தேதி, ஊட்டி ஒய்.பி.ஏ., அரங்கில் நடத்தவுள்ளன. சென்னை ஐகோர்ட் ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு, தேயிலை வாரிய தலைவர் பானு, "இன்கோசர்வ்' மேலா ண்மை இயக்குனர் உதயச்சந்திரன், தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் உட்பட பலர் பங்கேற்று, தேயிலை தொழிலின் தற்போதைய நிலை, எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்து பேசவுள்ளனர். இதில், விவசாயிகள்
பங்கேற்ற வேண்டும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

### உழவர் பெருவிழா

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் தாலுகா சிறுபத்தூர் சிறுகுடி கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது.
பஞ்சாயத்து தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். தோட்டக்கலை துறை உதவி இயக்குனர்கள் கிருஷ்ணமூர்த்தி, ரெங்கராஜன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். வேளாண் பொறியியல் துறை தமிழ்செல்வன் , விதைச்சான்று அலுவலர் ரெங்கராஜன், வேளாண் உதவி இயக்குனர் ஜெயபாலன் ஆகியோர் மண் மாதிரிகள் எடுப்பது குறித்தும், வேளாண்மையில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்ப செயல் விளக்கங்கள் செய்து காட்டினர்.
வேளாண்மை உதவி அலுவலர்கள் பிச்சைப்பிள்ளை, துரைசங்கர், ஜீவானந்தம், அட்மா தொழில் நுட்ப அலுவலர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

செயற்கையில் பழுத்த மாம்பழம் அழிப்பு: அரசு அலுவலர் அதிரடி

கரூர்: க.பரமத்தி பகுதியில் கால்சியம் கார்பைட் கல் வைத்து பழுக்க வைக்கப்பட்ட, ஒரு டன் மாம்பழங்கள் பறிமுதல் செய்து, அழிக்கப்பட்டது.
கரூர் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கொண்ட குழுவினர், க.பரமத்தி பகுதியில் உள்ள மாம்பழ குடோன்களில் சோதனை நடத்தினர். அப்போது, கால்சியம் கார்பைட் கல் வைத்து பழுக்க வைக்கப்பட்ட, ஒருடன் மாம்பழங்கள் மற்றும், மூன்று கிலோ கால்சியம் கார்பைட் கல்கள் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டன.
இதேபோல் கரூர், குளித்தலை பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பஸ்ஸ்டாண்ட் அருகில் உள்ள கடைகளில் சோதனை நடத்தப்பட்டது. இங்கு உடலுக்கு ஒவ்வாத பொருள்களை கொண்டு, மலிவு விலையில் குளிர்பானம், பிஸ்கெட், ஐஸ்கிரீம் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. அவையும் உணவு பாதுகாப்பு அலுவலர்களால் பறிமுதல் செய்யப்பட்டது.

700 ஏக்கரில் கால்நடை தீவன புல் வளர்ப்பு: கலெக்டர் நேரில் ஆய்வு

திருத்துறைப்பூண்டி: வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பகுதியில் கால்நடை தீவன புல் வளர்க்கப்படுவதை திருவாரூர் கலெக்டர் நடராஜன் ஆய்வு செய்தார்.
விவசாயிகளுக்கு கால்நடை தீவன புல் வளர்க்க மானியத்துடன் நிதி வழங்கப்பட்டது. 30 ஏக்கரில் தீவனம் சோளம் வளர்க்கப்பட்டு வருகிறது. தீவன புல் வளர்க்க ஓர் ஏக்கருக்கு 6,800 மானியமாக வழங்கப்படுகிறது. திருத்துறைப்பூண்டி அருகே உள்ள வரம்பியம் பஞ்சாயத்தில் விவசாயி முருகானந்தம் இரண்டு ஏக்கரில் தீவனம் சோளம் வளர்த்துள்ளார். இதை, கலெக்டர் நடராஜன் பார்வையிட்டு விவசாயி முருகானந்தத்திடம் கேட்டறிந்தார்.
கலெக்டர் நடராஜன் கூறியதாவது:

திருவாரூர் மாவட்டம் முழுவதும் வறட்சி நிலவியதிலும் 700 ஏக்கரில் கால்நடை தீவன சோளத்தை விவசாயிகள் வளர்த்துள்ளனர். தற்போது 15 நாள் பயிராக உள்ளது. 60 நாட்கள் ஆனதும், தற்போது வளர்க்கப்படும் பயிர் விவசாயிகளின் தேவைக்கு போக மீதம் உள்ள தீவன புல்லை கிலோ ரூபாய் இரண்டுக்கு வாங்கி பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் கால்நடை வளர்ப்போர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு விற்கப்படும்.
இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.
கால்நடை மண்டல இணை இயக்குனர் தனபால், உதவி இயக்குனர் தமிழ்செல்வன், திட்ட இயக்குனர் சாமுவேல் இன்பதுரை, வேளாண் உதவி இயக்குனர் நடசேன், தாசில்தார் ராஜகோபால் பஞ்சாயத்து யூனியன் தலைவர் வேதநாயகி, கால்நடை உதவி மருத்துவர்கள் ராமலிங்கம், ரம்யா, காவியா, சுரேந்தர், பஞ்சாயத்து யூனியன் ஆணையர் வெங்கடாச்சலபதி உட்பட பலர் இருந்தனர்.

**நெல் நடவுப்பணி செய்ய பழநி விவசாயிகள் தயக்கம்**

பழநி:பழநியில் குறிப்பிடும்படியாக, கோடை மழை பெய்யாததால், குளங்கள் வறண்டும், அணைகளின் நீர்மட்டம் குறைந்து உள்ளது. இதனால் கோடைகால நடவுப்பணிகளை,மேற்கொள்ள விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.பழநி வட்டாரத்தில் ஏப். 17, 18, 28ல் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக 16 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கொடைக்கானலில் பெய்த மழையால், கோடைகால நீர்தேக்கத்திற்கு மட்டும் சிறிதளவு தண்ணீர் வரத்து உள்ளது. வரதமாநதி, பாலாறுபொருந்தலாறு, குதிரையாறு அணைகளுக்கு தண்ணீர் வரத்து இல்லாமல் நீர்மட்டம் குறைந்து காணப்படுகிறது.தயக்கம்: கடந்தாண்டில்(2012ல்) கோடை மழையை நம்பி, பழநி வட்டாரத்தில் ஏராளமான விவசாயிகள் நெல் நடவுப்பணிகளை மே முதல் வாரத்தில் மேற்கொண்டனர். ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு மழையில்லாததால், மகசூல் குறைந்து. நஷ்டம் ஏற்பட்டது.இவ்வாண்டும் (2013) கோடை மழை ஏப்ரலில், பழநியில் குறிப்பிடும்படியாக பெய்யவில்லை. சூறாவளி காற்றுடன் மிதமான மழை பெய்தது. விவசாய ஆதாரங்களான குளங்களில் தண்ணீர் இல்லை. அணைகளுக்கும் நீர்வரத்து இல்லாமல் நீர் மட்டம் குறைந்துள்ளது. இதன் காரணமாக இவ்வாண்டு நெல்நடவுப்பணிகளை மேற்கொள்ள விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். இனிவரும் நாட்களில் கனமழை பெய்ந்து, அணைகள், குளங்களுக்கு நீர்வரத்து வந்தால் மட்டுமே கோடை நெல்நடவு பணிகளை விவசாயிகள் மேற்கொள்ள முடியும். எனக் கூறுகின்றனர்.அணைகளின் நேற்றைய நிலவரம்(மொத்த உயரம் அடைப்புக்குறிக்குள்): வரதமாநதி அணைக்கு, 2 கன அடி நீர் வெளியேற்றம் உள்ளது. நீர்மட்டம் 25.95 அடி ( 67 அடி). பாலாறுபொருந்தலாறு அணையின் நீர்மட்டம் 26.31 அடி(65 அடி). குதிரையாறு அணை நீர்மட்டம் 29.52 அடி(80 அடி). வையாபுரி

பாசன விவசாய சங்க செயலாளர் ரத்தினம் கூறுகையில், "போ திய மழையில்லாததால், கோடை நெல்நடவு பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணறுகளில் தண்ணீர் இல்லை. தொடர் ந்து கனமழை பெய்ந்தால் மட்டுமே, கோடை நடவுப்பணிகளை துவங்க முடியும்," என்றார்.

**வேளாண் கருத்தரங்கம்**

பரமக்குடி:பரமக்குடியில் பாரம்பரிய பொருட்களின் மதிப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்து, வேளாண்மைத்துறை சார்பில் மாவட்ட அளவிலான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. கலெக்டர் நந்தகுமார் தலைமை வகித்தார். இணை இயக்குநர் சக்திமோகன் வரவேற்றார். முதுகுளத்தூர் எம்.எல்.ஏ., முருகன், பரமக்குடி நகராட்சி தலைவர் கீர்த்திகா, மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய ஆசிரியர் பானுமதி, கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய ஆசிரியர் கணேஷ்ராஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் ஆரோக்கிய சுகுமார், தோட்டக்கலை இணை இயக்குநர் இளங்கோவன், துணை இயக்குநர் ராஜகோபால் வாழ்த்தினர்.

**கூட்டுறவு வங்கிகளில் பயிர் கடனுக்கான அசல், வட்டியை தள்ளுபடி செய்யுங்கள் அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை**

சிவகங்கை:தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் 2012-13ல் பெற்ற, பயிர் கடன்களை அசல், வட்டியுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என, சிவகங்கை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சிவகங்கை மாவட்ட விவசாயிகள் நெல், கரும்பு, பயறு வகை உள்ளிட்ட பயிர்களை கடந்த ஆண்டு நடவு செய்தனர். இதற்காக, 2012-13ல் தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கத்தில், பயிர் கடன் வழங்குவதற்காக, அரசு ரூ.50 கோடியை ஒதுக்கியது. இத்தொகையை, சிறு, குறு, நடுத்தர விவசாயிகளுக்கு, தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், வழங்கினர். மானாமதுரை, திருப்புவனம் தாலுகாவில், வைகை ஆற்று பாசனத்தை நம்பி, நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் நடவு செய்திருந்தனர். கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்துவிட்டதால், வைகை ஆற்றில் நீர் வரத்து இன்றி, நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை காப்பாற்ற முடியாமல் போனது. கிணற்று பாசனம் மூலம், கரும்பு நடவு செய்த விவசாயிகளுக்கும்போதிய நீர் இன்றி, ஏக்கருக்கு 30 டன் கரும்பு விளையவேண்டிய இடத்தில், 15 டன் கூட கிடைக்கவில்லை. பயிர்கடன் பெற்று, கடந்த ஆண்டு விவசாயம் செய்த, விவசாயிகளின் நிலங்கள் வறண்டு, நடவுக் கூலியை கூட பெற முடியாமல் தவிக்கின்றனர். தள்ளுபடி தேவை: எனவே, 2012- 13ல் தொடக்க விவசாய கூட்டுறவு கடன்

சங்கங்களில் பெற்ற, சம்பா பருவ சாகு படிக்காக, கடன் பெற்ற விவசாயிகளின் அசல், வட்டியை முற்றிலும் தள்ளுபடி செய்யவேண்டும் என, மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் மாணிக்கம், செயலாளர் ஆதிமூலம் கூறுகையில்,"சம்பா பருவ 2வது சாகுபடிக்காக, 2012-13ல் தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளில், விவசாயிகள் பெற்ற பயிர்கடனுக்கான அசல், வட்டியை செலுத்த அந்தந்த கூட்டுறவு வங்கிகள் மூலம், நோட்டீஸ் அனுப்புகின்றனர்.விவசாயிகள் கண்ணீர் போக்க, பயிர்கடன் அசல், வட்டியை முழுவதுமாக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். நாளை வரும் மத்திய குழுவிடம் மனு அளிக்க உள்ளோம்,' என்றனர்.

**வறட்சி நிவாரண நிதி கிடைக்காமல் விவசாயிகள் கவலை அரசு நிதி ஒதுக்கியும் வழங்குவதில் ஏன் சுணக்கம்**

சிவகங்கை:சிவகங்கையில், வறட்சி பாதித்த நெல், கரும்பு, காய்கறி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க, அரசு நிதி ஒதுக்கியும், விவசாயிகள் "கையில்' பணம் வந்து சேராமல், கவலை அடைந்துள்ளனர்.மாவட்டத்தில், கடந்த ஆண்டு 80 ஆயிரம் எக்டேரில் நெல், கரும்பு, காய்கறி மற்றும் பயறு வகைகளை நடவு செய்திருந்தனர். நடவு செய்த பயிர்களை காப்பாற்ற போதிய மழையின்றி வறட்சி ஏற்பட்டது. நடவு பயிறுகள், விவசாயிகளால் காப்பாற்ற முடியாமல், கருகின. வறட்சியால், பாதித்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரி, அரசுக்கு பல்வேறு மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, நிதி அமைச்சர் தலைமையில், வறட்சி நிவாரண குழுவினர் மாவட்ட வாரியாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தனர். விவசாயிகளுக்கு, நெல் உள்ளிட்ட பயிர் பாதிப்பிற்கேற்ப, அரசு நிதி ஒதுக்கியது. சிவகங்கை மாவட்டத்திற்குரிய பல கோடி ரூபாயையுள் அரசு அனுப்பியுள்ளது. சுணக்கம்: ஆனால் நிவாரண தொகையை, விவசாயி களுக்கு வழங்கும் முயற்சியில், மாவட்ட நிர்வாகம் இறங்கவில்லை. நிவாரண நிதியை வழங்குவதில், சுணக்கம் காட்டுவதால், வறட்சியின் கோர பிடியில் சிக்கிய விவசாயி கள், பாதித்த நிலங்களுக்கு நிவாரணம் கிடைக்காமல், கவலையில் ஆழ்ந்துள்ளனர். அரசின் நிவாரணத்தை விரைந்து வழங்க, மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என, விவசாயிகள் கோரியுள்ளனர். வருவாய்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: அரசு, வழங்கிய வறட்சி நிவாரண நிதியை, அந்தந்த விவசாயிகளின் வங்கி கணக்கில்,நேரடியாக செலுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கிறது. இதற்காக, தொடக்க விவசாய கடன் சங்கங்களில், வங்கி சேமிப்பு கணக்கை இது வரை துவங்கிடாத, விவசாயிகள் உடனே கணக்கு துவங்க, தாசில்தார்கள் மூலம் வலியுறுத்தி யுள்ளோம். கணக்கு துவங்கியவுடன், விவசாயிகள் கணக்கிற்கே நிவாரண தொகை செலுத்தப்படும், என்றார்.

**உழவர் விழாவில் மிளகாய் வத்தல் தரம் பிரிப்பு செயல் விளக்கம்**

விருதுநகர்: உழவர் பெரு விழா திருச்சுழி மிதிலைக்குளத்தில் நடந்தது. வேளாண் வணிகத்துறை சார்பில் விளை பொருட்களின் மதிப்பு கூட்டுதல் சம்பந்தமாக கருத்துக்காட்சி நடந்தது. திருச்சுழி ஒன்றி தலைவர் இந்திரா தலைமை வகித்தார். மிதிலைக்குளம் ஊராட்சித்தலைவர் கவிதா முன்னிலை வகித்தார். உழவர் சந்தை வேளாண் அலுவலர் சந்திரசேகரன் பேசுகையில்,"" மிளகாய் வத்தல் சிறப்பு, நடு, பொதுத்தரம் என மூன்று தரங்களாக பிரிக்கப்படுகிறது. தரமான சிவப்பு தர வத்தலுக்கு அதிக விலை கிடைக்கும்.வத்தலை சந்தைக்கு கொண்டு செல்லுகையில் அழுத்தம் தராமல் வத்தலை எடுத்து செல்ல வேண்டும். இல்லையென்றால் தரம் பாதிக்கப்படும், நொறுங்கி விடும்," என்றார். மிளகாய் வத்தல் தரம் பிரிப்பு பற்றி வேளாண் உதவி அலுவலர் மோகன் காந்தி செயல்விளக்கம் செய்து காட்டினார். வேளாண் உதவி இயக்குனர் நாச்சியாரம்மாள், தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெயலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். வேளாண் வணிகத்துறை சார்பில் சிறு தானிய சாகுபடி "சிடி' மூலம் பட காட்சி நடந்தது. வேளாண் வனிகத்துறையின் சார்பில் கையேடு, துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன.

**காய்கனி பதனிடும் குடோன் அமைக்க விவசாயிகள் கோரிக்கை**

சேர்ந்தமரம்:சேர்ந்தமரம் பகுதியில் காய்கனி பதனிடும் குடோன் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.விவசாயிகள் ஒவ்வொரு சீசனிலும் தங்கள் உற்பத்தியாக்கும் விளை பொருட்களான கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, மிளகாய் போன்ற அனைத்து காய்கனிகள் அந்ததந்த சீசன் காலங்களில் விலை வீழ்ச்சிஅடைவதால் விவசாயிகளுக்கு உற்பத்தி விலை கிடைக்காமல் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயகம் நாளுக்குநாள் நலிவடைந்து எதிர்காலங்களில் விவசாயம் செய்யகூட ஆர்வம் இல்லாதமலும், ஆட்கள் இல்லாமலும் போகும் அவலநிலை உள்ளது.நலிந்துவரும் விவசாயத்தையும், அவர்கள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களையும் ஆண்டு முழுவதும் விலை கிடைக்க காய்கனி பதனிடும் குளிர்சாதன குடோன் அமைத்தால் சீசன் காலங்களில் பெருமளவில் உற்பத்தியாகும் காய்கனிகளை குடோன்களில் பதனிட்டு சீசன் இல்லாத காலங்களிலும் விற்பனை செய்ய ஏதுவாக அமையும் இதனால் விவசாயிகளுக்கு மட்டுமில்லாது நுகர்வோர்களுக்கும் சீரான விலை ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்ய முடியும்.இதுபற்றி சேர்ந்தமரத்தை சேர்ந்த சமூகஆர்வலர் மனோஜ் கூறியதாவது:-நெல்லை மாவட்டத்தில் விவசாய உற்பத்தி அதிகம் அதிலும் காய்கனி உற்பத்தி செய்வது சேர்ந்தமரம், தென்காசி, சுரண்டை, பாவூர்சத்திரம், ஆலங்குளம், புளியங்குடி போன்ற பகுதிகள் ஆகும். இங்கு விளையும் காய்கனிகள் நெல்லை, மதுரை, சென்னை, கோவை, போன்ற பகுதிகளுக்கும் கேரளா போன்ற வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சில சமயங்களில் ஒரே பொருளை விவசாயிகள் அந்தந்த சீசனில் உற்பத்தி செய்வதால் உரிய விலை கிடைப்பதில்லை சில

சமயங்களில் விளைந்த பொருட்களை வயலிலிருந்து பறித்து மார்கெட்டுக்கு கொண்டுசெல்லும் செலவுகூட கிடைக்காமல் அப்படியே வயலில் பறிக்காமல் விட்டுவிடுகிறார்கள்.இதனால் அந்த விளைபொருட்கள் வயலில் அழுகி காய்ந்து போகும் நிலையில் விவசாயிகள் பெறும் நஷ்டம் அடையும் நிலை ஏற்படுகிறது. எனவே குமரி மாவட்டம் தோவாளையில் உள்ள பூ மார்கெட் குடோனை போன்று சேர்ந்தமரம், சுரண்டை, புளியங்குடி, பாவூர்சத்திரம் ஆகிய பகுதிகளில் காய்கனி பதனிடும் குளிர்சாதன குடோன்களை மத்திய அரசோ அல்லது மாநில அரசோ அமைத்து விவசாயிகளுக்கு சீரானவிலை ஆண்டு முழுவதும் கிடைக்க செய்யவேண்டும் இதனால் விவசாயிகள் மட்டுமில்லாது வியாபாரிகளும் பயனடைவார்கள். விவசாயமும் எதிர் வரும் காலங்களில் தொய்வின்றி நடைபெறவழிவகுக்கும் என அவர் கூறினார்.

தினகரன்

## வேளாண்மை பல்கலையில் ஆன்லைனில் அட்மிஷன்

நெல்லை: கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் 2013- 14ஆம் ஆண்டிற்கான இளமறிவியல் பட்டப்படிப்புக்கான மாணவர் சேர்க்கை நடத்த உள்ளது. பிஎஸ்சி, பி.டெக்., பிரிவுகளில் 13 வகை பட்டப்படிப்புகளுக்கு சேர்க்கை நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டை இருப்பிடமாக கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே பட்டப்படிப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இதற்கு தேவையான தகுதி மற்றும் விண்ணப்ப முறைகள் குறித்த விபரங்களை பல்கலைக்கழக இணையதளம் லீttஜீ://tஸீணீu.ணீநீ.வீஸீ/ணீபீனீவீssவீஷீஸீ.லீtனீறீ என்ற முகவரியில் பார்க்கலாம். இந்த கல்வி ஆண்டிலிருந்து இணையதளம் மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சேர்க்கை தகவல் கையேடு மற்றும் விண்ணப்ப படிவத்தை பல்கலைக்கழக இணையதளத்தில் பெறலாம். இளமறிவியல் பட்டப்படிப்பில் சேரவிரும்பும் மாணவர்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணையதளத்தை அணுகி அதிலிருக்கும் விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்து பதிவு செய்ய வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை இணையதளத்தில் இருந்து அச்சுப் பதிவு எடுத்து அதனுடன் தேவையான சான்றிதழ்களை இணைத்து, முதன்மையர் (வேளாண்மை) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்&641 003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்ப கட்டணத்தை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளைகளில் விண்ணப்பத்துடன் அச்சுப்பதிவு எடுத்த செலான் மூலம் வங்கி கட்டணம் உட்பட

ரூ.625 (எஸ்சி, எஸ்டி, எஸ்சிஏ) செலுத்த வேண்டும். செலானின் டிஎன்ஏயூ பகுதியை விண்ணபப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

விண்ணபப்பத்தை இன்று முதல் ஜூன் 7ம் தேதி வரை இணையதளத்தில் பூர்த்தி செய்யலாம். பூர்த்தி செய்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணபப்பங்களை ஜூன் மாதம் 7ம் தேதி மாலை 5 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

## மத்திய நிபுணர் குழுவின் ஆய்வு இன்று முதல் தொடக்கம்

**ஆய்வுக்குப் பின்னர் தமிழக அரசுடன் ஆலோசிக்க மத்திய நிபுணர் குழு முடிவு**

சென்னை: தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மத்திய நிபுணர் குழுவினர் இன்று முதல் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ய உள்ளனர். தமிழ்நாட்டில் வறட்சி பாதித்த மாவட்டங்களை மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள 10 பேர் அடங்கிய நிபுணர் குழுவினர் இன்று முதல் ஆய்வை தொடங்குகின்றனர். இரண்டு குழுக்களாக பிரிந்து 3 நாட்கள் மத்திய நிபுணர் குழுவினர் ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். ஒவ்வொரு பகுதியிலும் விவசாயிகளின் கோரிக்கையை கேட்டறியும் நிபுணர் குழுவினர் பின்னர் தமிழக அரசு அதிகாரிகளிடம் சென்னையில் ஆலோசனை நடத்த உள்ளனர்.

இதனையடுத்து தமிழகத்தில் உள்ள வறட்சி நிலவரம் மற்றும் தமிழக அரசின் நிவாரண கோரிக்கைகள் குறித்து மத்திய அரசிடம் நிபுணர் குழுவினர் அறிக்கை அளிக்க உள்ளனர். தமிழகத்தில் சென்னை தவிர 31 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்த முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார். முதல்வரின் இந்த கோரிக்கையை ஏற்ற மத்திய அரசு நிபுணர் குழுவை நியமித்து ஆய்வு மேற்கொள்ள உள்ளது.

இந்த குழு அளிக்கும் ஆய்வு அறிக்கை பொறுத்தே தமிழகத்திற்கு மத்திய அரசு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தமிழ்நாட்டின் வறட்சி பாதித்த மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் மத்திய நிபுணர் குழுவினரிடம் விவரம் தெரிவிக்க எதிர்பார்த்து காத்து உள்ளனர்.

## 2,756 ஏக்கர் நிலம் பயன்பெறும் முன்கார் சாகுபடிக்கு மணிமுத்தாறு அணை திறப்பு

அம்பை: பருவமழை சரிவர பெய்யாததால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில் கார், பிசானம் என இருபோக சாகுபடியும் பொய்த்து விட்டது. மணிமுத்தாறு அணைக்குட்பட்ட பெருங்கால் பாசனத்திற்கு ஆண்டுதோறும் முன்கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்த ஆண்டு பெருங்கால் பாசனத்திற்கு மணிமுத்தாறு அணையில் இருந்து மே 5ம் தேதி தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது.

இதன்படி, நேற்று கலெக்டர் சமயமூர்த்தி முன்னிலையில், வீட்டு வசதி வாரியத் தலைவர் முருகையா பாண்டியன் அணையிலிருந்து தண்ணீரை திறந்து விட்டார். அணை திறப்பு நிகழ்ச்சிக்கு பிறகு கலெக்டர் சமயமூர்த்தி நிருபர்களிடம் கூறியதாவது:மணிமுத்தாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதன் மூலம் பெருங்கால் பாசனத்திற்கு உட்பட்ட ஜமீன் சிங்கம்பட்டி, தெற்கு பாபான்குளம், வைராவிகுளம், தெற்கு கல்லிடைக்குறிச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 756 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும். இந்த பகுதிகளின் பாசனத்திற்காக தினமும் 30 முதல் 40 கன அடி வீதம் தொடர்ந்து 105 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும். நெல்லை மாவட்டத்தில் கடனாநதி அணையில் பரீட்சார்த்த முறையில் படகு சவாரி விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கொச்சியில் ரூ.5 லட்சம் மதிப்பில் படகு தயாராகிறது. இதேபோல் மணிமுத்தாறு அணையிலும் சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் படகு சவாரி தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என கூறினார்.

உழவர்பெருவிழாவில் தகவல்அடர்நடவு தொழில்நுட்பத்தில் வாழையில் இரட்டிப்பு உற்பத்தி மும்மடங்கு வருமானம்

திருச்சி: அடர்நடவு தொழில்நுட்பத்தில் ஏக்கருக்கு 1,800 கன்றுகள் நடவுதன் மூலம் இரட்டிப்பு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் வாழையில் பெறலாம் என உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது.

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே மணக்கால் கிராமத்தில் உழவர் பெருவிழாவுடன் பாரம்பரிய உணவு பழக்க வழக்கத்தின் முக்கியத்துவம் குறித்த விவசாயிகள் கருத்தரங்கு மற்றும் விவசாயிகள் பேரணி நடைபெற்றது. லால்குடி வேளாண் உதவி இயக்குநர் மரியரவி ஜெயக்குமார் தலைமை வகித்தார். ஊராட்சித்தலைவர் பன்னீர்செல்வம், கவுன்சிலர் குமார் ஆகியோர் முன்னிலை

வகித்தனர்.

திருச்சி தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) சந்திரசேகரன், காய்கறி சாகுபடி, பாலித்தீன் போன்றவை அமைத்து களை கட்டுப்படுத்துதல் குறித்தும் பேசினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் சம்பத் பேசுகையில், வாழையில் அடர் நடவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஏக்கருக்கு 1,800 கன்றுகள் நடவுதன் மூலம் வாழையில் தற்போது உள்ள மகசூலை காட்டீலும் இரண்டு மடங்கு உற்பத்தியும், மும்மடங்கு வருமானமும் கிடைக்கும் என்றார்.

முன்னதாக விவசாயிகளிடம் அடிப்படை புள்ளி விபரம் மற்றும் மண் மாதிரி சேகரிக்கப்பட்டது. விவசாயிகள் அனைவருக்கும் இளநீர் வழங்கப்பட்டதுடன் பருத்தியிலான ஆடை அணிவதையும் வலியுறுத்தி பனியன் மற்றும் சூடோமோனாஸ் வழங்கப்பட்டது.விழா ஏற்பாடுகளை லால்குடி வேளாண் அலுவலர் ராஜேந்திரன், துணை வேளாண் அலுவலர் முனுசாமி, உதவி வேளாண் அலுவலர்கள் ஜான்ஜெயக்குமார், வேல்முருகன், சுவாமிநாதன், சந்திரசேகர், துரை செல்வம், தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஊமைத்துரை, ஜேம்ஸ், சசிக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

**தரமான மிளகாய் வத்தல் பெற வேளாண் துறை யோசனை**

திண்டுக்கல்: தரமான சிவப்பு நிற மிளகாய் வத்த லை பெற வேளாண்மை வணிகத்துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் வணிகத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தரமான சிவப்பு நிற தன் மை மற்றும் காரத்தன்மை கொண்ட மிளகாய் வத்தல் மட்டுமே கூடுதல் விலைக்கு விற்க முடியும். மிளகாய் வத்தலை சிறப்பு தரம், நடுத்தரம், பொதுத்தரம் என 3 தரங்களாக பிரிக்கலாம். தர மான சிவப்பு நிறம் மற்றும் காரத்தன்மை கொண்ட மி ளகாய் வத்தல்

பெறுவதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

மிளகாய் தோட்டத்தில் பழம் அழுகல் நோயை, பூஞ்சாண கொல்லிகள் தெளி த்து கட்டுப்படுத்த வேண் டும். ஹீலியாத்திஸ் மற்றும் புரோடினாய புழுக்களால் காய்கள் தாக்கப்பட்டால் ஒருங்கிணைந்த பயிர் பாது காப்பு முறைகளை மேற்கொ ள்ள வேண்டும்.

சிபாரிசுப்படி பொட் டாஷ் உரமிடுவதால் காய் களின் நிறமும், கார தன்மை யும் அதிகரிக்கிறது.

மிளகாய் செடியில் பழங்கள் முழுவ தும் சிவப்பு நிறமாக மாறிய வுடன் பழங்களை பறிக்க வேண்டும். மேலும் காம்பு டன் பறிக்க வேண்டும். பழங்களை பறித்தவுடனே காய போட வேண்டும்.

மணல் பரப்பிய களங்களில் பழங்களை பரப்பி உலரவிட வேண்டும். மிள காய் பழங்களை மிதமான வெப்பநிலையில் காலையி லும், மாலையிலும் 4 நாட் கள் உலர வைக்க வேண்டும்.

நன்கு உலர்த்திய மிளகாய் வத்தலிலிருந்து காய்ப்புழு தாக்கிய மற்றும் பழம் அழு கல் நோய் தாக்கிய, நிறம் மாறிய சண்டு வத்தல், மே லும் உடைந்த மிளகாய் வத் தலை நீக்கி நல்ல வத்தலை பிரித்து எடுக்க வேண்டும்.

அறையின் ஈரம் மிள காய் பழங்களை தாக்காமல் இருக்க தரையின் மேல் மணல் பரப்பில் அதன் மேல் சேமி க்க வேண்டும். இரவில் மிள காய் பழங்கள் பனியால் பாதிக்கப்படாமல் இருக்க பழங்கள் மீது லேசான படு தா போட்டு மூடி வைக்கலாம்.

மிளகாய் வத்தல் சிவப்பு நிறமாக இருக்கும்படி கவனி த்து கொள்ள வேண்டும். தவறான சேமிப்பு முறையில் வத்தல் கருப்பு நிறமாக மாறினால் அவற்றை நல்ல விலைக்கு விற்க முடியாது.

வத்தலை சந்தைக்கு கொண்டு செல்லும்போது சாக்கில் அமுக்காமல் அள்ளி வைத்து உடைந்து விடாமல் கொண்டு செல்ல வேண் டும். இவ்வாறு வேளாண் வணிக த்துறையினர் தெரிவித்தனர்.

கம்பம் பகுதியில் கோடைகால பயிரில் நோய் தாக்குதல் அதிகரிப்பு விவசாயிகள் கவலை

கம்பம், : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கோடைகால பயிரில் நோய் தாக்குதல் அதிகரித் துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கம்பம் ஊமை வாய்க்கால் பகுதியை சுற்றிலும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இரண்டாம் போக நெல் அறுவடை பணி முடிந்து விட்டது. தற்போது கோடை காலம் என்பதால் இன்னும் இரண்டு மாதங்களுக்கு முல்லை பெரியாற்றில் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கோடை கால பயிர்களான சலம்பு, பாசிப்பயறு, தட்டைப்பயறு உளுந்து உள்ளிட்டவைக ளை விதைத்துள்ளனர்.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் இந்த பயிர்களில் நசுகினி என்னும் பூச்சிகளின் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதை தடுக்க விவசாயிகள் மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயி முத்துச்சாமி கூறுகையில், ஜூன் மாதம் முதல் வாரத்தில் அடுத்த முதல் போக நெல் நடவு பணிக்கு தயாராவோம். தற்போது விதைத்துள்ள கோடை கால பயிர்களில் உள்ள காய்களை பறித்து விட்டு செடிகளை அடியுரமாக அப்படியே வயல்களில் உழுது நடவுப்பணி மேற்கொள்வோம்.

இது மிகவும் சிறந்த இயற்கை உரமாக பயன்படுகிறது. ஆனால் கடந்த சில தினங்களாக இந்த பயிர் களில் நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால் மருந்து தெளித்து வருகிறோம், என்றார்.

கடும் வறட்சி.... அதிகரிக்கும் முகூர்த்தம் வரலாறு காணாத வகையில் காய்கறி விலை உயர்வு பீன்ஸ் கிலோ ரூ130 தக்காளிதான் ஆறுதல்

நாகர்கோவில், : குமரியில் கடும் வறட்சி மற்றும் அதிகரிக்கும் சுப முகூர்த்தங்கள் காரணமாக காய்கறிகள் விலை கண் மூடித்தனமாக உயர்ந்துள்ளது.
குமரி மட்டுமின்றி தமிழகம் முழுவதும் பருவ மழை பொய்த்துள்ளதால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் காய்கறி வரத்து குறைந்துள்ளது. சித்திரை 1ம் தேதி முதல் சுபமூகூர்த்தங்கள் மற்றும் கோயில் திருவிழா மற்றும் கொடை விழாக்கள் தொடங்கியுள்ளதால் காய்கறி நுகர்வு அதிகரித்துள்ளது. இதனால் கடந்த 3 நாட்களில் காய்கறி விலை கிடுகிடு வென உயர்ந்துள்ளது.
நேற்றைய காய் கறி விலை விபரம் மொத்த விலை - சில்லறை விலை (அடைப்பில் உழவர் சந்தை விலை):
நாட்டு கத்தரிக்காய் ரூ25 - ரூ30 (ரூ25), வரிக்கத்தரி ரூ20 - ரூ25 (ரூ20), வெண்டைக் காய் ரூ16 - ரூ22 (ரூ24), வெண்டைக்காய் முதல் ரகம் (ரூ40), தக்காளி ரூ20- ரூ25 (ரூ18), ஆப்பிள் தக்காளி ரூ20 -ரூ25 (ரூ18), மிளகாய் ரூ24 -ரூ 25 , உருட்டு மிளகாய் ரூ30 -ரூ40 (ரூ40), பஜ்ஜி மிளகாய் ரூ30- ரூ40 (ரூ30), முருங்கைக்காய் ரூ12 -ரூ20 (ரூ15), சீனியவரை ரூ15 -ரூ22 (ரூ20), முருங்கை பீன்ஸ் ரூ120 - ரூ140 (ரூ125), பீன்ஸ் சாதா ரூ80 -ரூ100 (ரூ120), இஞ்சி ரூ70 -ரூ90 (ரூ88), சேனை ரூ20 -ரூ28 (ரூ22), பால்சேம்பு ரூ60 - ரூ80 (ரூ50), உருளை ரூ20 - ரூ25 (ரூ17), முட்டைக்கோஸ் ரூ15 -ரூ20 (ரூ17), காலிபிளவர் ரூ20 - ரூ35 (ரூ35 -ரூ40), பீட்ரூட் ரூ20 -ரூ24 (ரூ30), கேரட் முதல் ரகம் ரூ80-ரூ100 சின்ன ரக கேரட் ரகம் ரூ50- ரூ65 முதல் ரூ70 (ரூ60), பல்லாரி முதல் ரகம் ரூ16 - ரூ20, 2ம் ரகம் ரூ25 - ரூ30, வெள்ளரிக்காய் ரூ20, காரமணி ரூ25, மல்லி ரூ20 - ரூ30 (ரூ80) புரூனா ரூ20 - ரூ30 (ரூ80), கறிவேப்பிலை ரூ20 - ரூ30 (ரூ15), மரவள்ளி ரூ18 (ரூ16), வாழை இலை தூத்துக்குடி இலை 100 எண்ணம் ரூ200, நாட்டு வாழை இலை 150க்கு ரூ350, சின்ன வெங்காயம் ரூ52 - ரூ60 (48), பாகற்காய் ரூ20 - ரூ30 ( ரூ25 - ரூ20), புட லங்காய், பூசணிக்காய், தடியன் காய் ரூ9 - ரூ14 ( ரூ10), மாங்காய் ரூ12 - ரூ16 ( ரூ15), கறிபலா ரூ10.
ரூ200ஐ தாண்டும்
விலை ஏற்றம் குறித்து அப்டா மார்க்கெட்டை சேர்ந்த ஏற்றுமதி மற்றும் மொத்த விற்பனையாளர் ராஜ் மற்றும் பிள்ளையார்புரத்தை சேர்ந்த வெளிநாட்டு ஏற்றுமதியாளர் தனபால் ஆகியோர் கூறுகையில், வழக்கமாக கோடை காலத்தில் காய்கறி விலை திருமண சீசன் என்றாலும் வரத்து அதிகம் காரணமாக மிதமான நிலையில் இருக்கும். இதனால் எங்களுக்கு வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்ய முடிந்தது. ஆனால் இந்தாண்டு பருவமழை பொய்ப்பு காரணமாக வரத்து வெகுவாக குறைந்துள்ளது ஆனால் தேவை அதிகம் உள்ளது. இதனால் விலை அதிகம் ஏறுகிறது.

மே மாதம் 10க்கும் மேற்பட்ட சுபமூகூர்த்த நாட்கள் உள்ளன. மேலும் கொடை விழாக்களும் உள்ளன. எனவே தேவை மேலும் அதிகரிக்கும். இதனால் பீன்ஸ் விலை தி200 தாண்டும் வாய்ப்பு உள்ளது. அதற்கிடையில் மழை பெய்தால் வரத்து அதி கரித்து விலை சற்று குறையும் என்றனர்.

### உரமூட்டை வழங்காததால் விவசாயிகள் கடும் அவதி

பண்ருட்டி: பண்ருட்டி அருகே சாத்திப்பட்டு கிராமத்தில் தானே புயலால் முந்திரி விவசாயம் பெரிதும் பாதிப்படைந்தது. இதையடுத்து தமிழக அரசு சார்பில் முதற்கட்ட உதவி வழங்கப்பட்டது. பின்னர் தோட்டக்கலைத்துறை சார்பில் முந்திரி கன்றுகள் விவசாயிகளுக்கு ஆயிரக்கணக்கில் வழங்கப்பட்டது. இதை தொடர்ந்து தற்போது முந்திரி விவசாயத்தில் மகசூலுக்காக உர மூட்டைகள் அரசால் வழங்கப்பட்டன. இவற்றை தோட்ட கலைத்துறையினர் சாத்திப்பட்டு கிராமத்தில் அடுக்கி வைத்துள்ளனர். ஆனால் 3 மாதங்களுக்கு மேலாகியும் உர மூட்டைகள் இன்னும் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். எனவே உர மூட்டைகளை உடனடியாக வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து உரம் வழங்க வேண்டுமென முந்திரி விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

### தோட்டப்பயிர் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு பயிற்சி

ஊட்டி: தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறையின் கீழ் மத்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பயிற்சி நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வளம் குன்றா தோட்ட பயிர் உற்பத்திக்கான இயற்கை வள பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் குறித்து ஊட்டி வட்டார விவசாயிகளுக்கான குறுகிய கால பயிற்சி நேற்று ஊட்டியில் உள்ள ரோஜா பூங்கா கட்டிடத்தில் அமைந்துள்ள பயிற்சி அரங்கில் துவங்கியது.

மத்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு நிலைய மூத்த விஞ்ஞானி டாக்டர் மணிவண்ணன்

வரவேற்று பயிற்சி குறித்து விளக்கி பேசினார். மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு மைய தலைவர் கோலா தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பயிற்சியை துவக்கி வைத்து பயிற்சி குறித்த புத்தகத்தை வெளியிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் தான் தோட்டக்கலைத்துறை திட்டங்கள் அதிகளவு செயல்படுத்தப்படுகின்றன. மாவட்டத்தில் 7600 எக்டர் அளவிற்கு தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்படுகின்றன. தற்போது நீலகிரியில் உள்ள மண் மற்றும் நீர்வளம் 30 வருடங்கள் கழித்தும் இதே வளத்துடன் விளங்க வேண்டும். மண் மற்றும் நீர் வளம் இல்லை எனில் ஒன்றும் செய்ய முடியாது. எனவே அவற்றை பாதுகாக்க விவசாயிகள் முயற்சிக்க வேண்டும். அதற்காக இது போன்ற பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதனை விவசாயிகள் நல்ல  முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும்' என்றார்.

தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் மணி தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் உள்ள திட்டங்கள் குறித்து பேசுகையில், தோட்டக்கலை நீலகிரி மாவட்டத்தில் முழுக்க முழுக்க சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக்கலைத்துறை மூலம் விவசாய உற்பத்தியை பெருக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாநில அரசு நிதியுதவியுடன் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு தேயிலை செடிகள், சில்வர் ஒக் மரக்கன்றுகள், பழமர கன்றுகள் வழங்கப்படுகின்றன. இதற்காக கடந்த ஆண்டு ரூ.47 லட்சம் மானியமாக பெறப்பட்டது. மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் உயர் விளைச்சல் கொண்ட காய்கறிகள் விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் நல்ல மகசூல் பெற வேண்டும் என்ற நோக்கில் வெளிநாடுகளில் இருந்து உயர்ரக விதைகள் தருவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் எம்.ப £லாடாவில் உள்ள மத்திய உருளைகிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து உயர்ரக உருளைகிழங்குகள் பெறப்பட்டு கோல்கிரைன், நஞ்சநாடு மற்றும் தும்மனட்டி ஆகிய தோட்டக்கலை பண்ணைகளில் உருளைகிழங்கு விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் நாற்றங்கால் அமைக்கவும் மானியத்தில் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதன் படி சிறிய அளவில் நாற்றாங்கால் பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். 1 லட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு 3 லட்சத்து 12 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்படுகிறது. சாகுபடி பரப்பை அதிகரித்தல் திட்டத்தின் கீழ் வாசனை திரவிய செடிகள் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. இதன் படி இஞ்சி, குருமிளகு, ஜாதிகாய் போன்ற பொருட்கள் உற்பத்தி செய்ய 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் கூடலூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிக பயனடைந்து வருகின்றனர்.

தேயிலைக்கு மாற்றாக பசுமைகுடில் அமைத்து மலர் சாகுபடி செய்யும் திட்டம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு செயல்படுத்தப்பட்டது. பசுமை குடில் அமைக்க 1 சதுர மீட்டருக்கு ரூ.467 மானிமாக வழங்கப்படுகிறது.  இயற்கை வழி மேலாண்மை திட்டத்தின் கீழ் மண்புழு உரம் தயாரித்தல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதில் கூடாரம் அமைத்து மண் புழு உரம் தயாரிப்பதற்கு ரூ 30 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது. பாத்திகள் அமைத்து தாயரிப்பதற்கு ரூ.5 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர தேனீ வளர்ப்புக்கும் மானியம் வழங்கப்படுகிறது. தேனி வளர்ப்பு திட்டத்தின் கீழ் கோத்தகிரி அருகேயுள்ள கொழிக்கரை பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிகம் பயன்பெற்றுள்ளனர். தோட்டக்கலை இயந்திரமாக்கல் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்காக நவீன இயந்திரங்கள் வாங்கினால் ரூ.17 ஆயிரத்து 500 வரை மானியம் வழங்கப்படுகிறது. இதே போல் காளான் வளர்ப்பு திட்டத்திற்கும் மானியம் வழங்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு முதல் ஆத்மா திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த பண்னை திட்டத்தின் கீழ் விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பு போன்றவைகள் ஊக்குவிக்கப்பட்டு மானியம் வழங்கப்படுகின்றன. இதுபோல் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றார். இந்நிகழ்ச்சியில் விஞ்ஞானி ராஜன், ரோஜா பூங்கா உதவி இயக்குநர் மீராபாய் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு உர நிர்வாகம் மானியம் குறித்து விளக்கம்

பாடாலூர்: பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா அயினாபுரம் கிராமத்தில் வேளாண¢மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவிற்கு ஆலத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி தலைமை வகித்தார்.

வேளாண்மை அலு வலர் ராஜேந்திரன் முன் னிலை வகித்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுப்ரமணியம், தமிழக அரசின் திட்டங்கள் குறித்தும், மானிய திட்டங்கள் குறி¢த்தும் விளக்கி பேசினார்.

கொளக்காநத்தம் கால்நடை உதவி மருத்துவர் ராஜேஷ்கண்ணா, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட அலுவலர் சரவணன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர் வெங்கடேசன், உதவி தோட்டக்கலை அலுவலர் வீரபாண்டியன், உதவி வேளாண்மை அலுவலர் கலியபெருமாள் உள்ளிட்டோர் தங்கள் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள், மானியங்கள் குறித்து விளக்கி  கூறினர்.

விழாவில் மண்மாதிரி எடுத்தல், உர நிர்வாகம், உர மானிய திட்டம், இயற்கை உரம் உள¢ளிட்ட திட்டங்கள் குறித்து விளக்கி கூறப்பட்டது. முன்னதாக வேளாண்மை துணை அலுவலர் மகேந்திரபூபதி வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் கலியபெருமாள் நன்றி கூறினார். ஏற்பாடுகளை வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

## கருமாபுரத்தில் உழவர் பெருவிழா கலெக்டர் மகரபூஷணம் பங்கேற்பு

அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கருமாபுரம் ஊராட்சியில் உழவர்பெருவிழா நடைபெற்றது. விழாவில் இளைஞர்கள் நலம் மற்றும் விளையாட்டுதுறை முதன்மை செயலாளர் முகமது நசிமூதீன், கலெக்டர் மகரபூஷணம் ஆகியோர் கலந்து கொண்டு, வேளாண்மை தோட்டக்கலை, பிறதுறைகளில் இருந்து அமைக்கப்பட்டுள்ள கண்காட்சிகளை பார்வையிட்டனர்.

அதைத்தொடர்ந்து கால்நடை மருத்துவமுகாமை முதன்மை செயலாளர் முகமதுநசிமூதீன் தொடங்கி வைத்தார். முகாமில் கூடுதல் கலெக்டர் சந்தீப் நந்தூரி, கருமாபுரம் ஊராட்சி மன்றதலைவர் பாலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் வேளாண்மை துணை இயக்குனர்கள் சுந்தரசவுண்டப்பன், அல்தாப், அயோத்தியாப்பட்டணம் உதவி வேளாண்மை இயக்குனர் செல்லதுரை, வேளாண்மை அலுவலர் நவநீத கிருஷ்ணன், கால்நடை டாக்டர் கோவிந்தன், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் சுப்பிரமணி, ரவி, கந்தசாமி ஆகியோர் பேசினார்கள். விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கப்பட்டது. முடிவில் இளநீர், பருத்தி, சிறுதானியங்கள் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இதில் 150–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வேளாண்மைத்துறை அதிகாரி வேண்டுகோள் கோடை மழையை பயன்படுத்தி உழவு செய்யலாம்

ஈரோடு

கோடை மழையை பயன்படுத்தி உழவு செய்யலாம் என்று வேளாண்மைத்துறை அதிகாரி வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

இதுகுறித்து கோபிசெட்டிபாளையம் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>மண் அரிப்பு</u>

தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 958 மில்லி மீட்டர் மழை பெய்கிறது. அதில், 35 சதவீதம் தென் மேற்கு பருவக்காற்றின் மூலமும், 50 சதவீதம் வடகிழக்கு பருவக்காற்றின் மூலமும் பெய்கிறது. மீதம் உள்ள 15 சதவீதம் மழை வறண்ட கோடை காலங்களில் பெய்கிறது. இந்த மழையானது பெரும்பாலும் மண் அரிப்பை ஏற்படுத்துவதோடு மட்டுமில்லாமல் மண்ணில் இருக்கின்ற பல்வேறு சத்துக்களையும் அரித்துக் கொண்டு போய் விடுகிறது.

மண்ணில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட குறைந்த அளவு மழை நீரும் சூரிய வெப்பத்தினால் விரைவில் ஆவியாக மாறி வெளியேறுகிறது. அதோடு விட்டு விடாமல் களைச் செடிகளும் நீரை அதிவேகமாக உபயோகப்படுத்துவதால் களைகள் வளர்வதுடன் மண்ணில் உள்ள நீர் மிக வேகமாக விரயமாகி விடுகிறது.

<u>கோடை உழவின் அவசியம்</u>

மேற்கண்ட பிரச்சினைகளில் இருந்து விடுபட சாகுபடி நிலங்களில் பயிர் அறுவடைக்குப் பின்னர் பெய்கின்ற கோடை மழையை அத்தியாவசியமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு கோடை உழவே சாலச்சிறந்தது ஆகும்.

பெரும்பாலும் மானாவாரி நிலங்களில் மண் மிகவும் கடினமாக இருக்கும். கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணின் இறுக்கம் குறைகிறது. மண்ணை புழுதிபட உழுவதால் மண்ணின் தன்மை மாறுபடுகிறது. மண்ணை துகள்களாக மாற்றுவதால் மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கிறது.

மண்ணில் காற்றோட்டம் அதிகரிப்பதால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் நன்கு வளர்ச்சி அடைகிறது. இதனால், நிலத்தில் உள்ள செடிகள், கழிவுகள் நன்கு மக்கி உரமாக மாற்றப்படுகிறது. மேலும், களைக்கொல்லி மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் வீரியம் வெகுவாக குறைந்து மண்ணின் விஷத் தன்மை குறைகிறது.

<u>புழுதிபட உழவு செய்தல்</u>

கோடை உழவினால் மண் நன்றாக நயமாகிறது. இதனால், நீர் ஊடுருவிச் செல்லும் தன்மை அதிகரிக்கிறது. நீர், வேர் மண்டலம் வரை சென்று பயிருக்கு நீர் உறிஞ்சும் தன்மை அதிகரிக்கிறது. நிலத்தின் சரிவுக்கு குறுக்காக வயலை நன்கு பல தடவை புழுதிபட உழவு செய்ய வேண்டும். இப்படி உழவு செய்வதால் மழை நீர் மண்ணுக்கு அடியில் 10 செ.மீட்டர் முதல் 15 செ.மீட்டர் வரை ஆழத்திற்கு உட்செல்லும். இதனால், நீர் ஆவியாவதை தடுப்பதோடு, வறட்சி காலங்களில் பயிருக்கு தேவையான அளவு நீர் கிடைக்க ஏதுவாகிறது.

நிலச்சரிவு ஒரு சதவீதம் முதல் 3 சதவீதம் வரை உள்ள நிலங்களில் ஆழச்சால் அகலப்பாத்தி அமைக்க வேண்டும். ஆழச்சால் 120 செ.மீட்டர் அகலப்பாத்திகளாகவும், 30 செ.மீட்டர் அகலம் உள்ள 15 செ.மீ. ஆழம் உள்ள சால்களாகவும் அமைப்பது மிகவும் நல்லது. இதனால் நீர்ப்பிடிப்புத்

தன்மை அதிகரிப்பதோடு, நீர் ஓட்டத்தை தடுத்து சத்துள்ள மண் வீணாவதையும் தடுக்கலாம். மழைநீர் சால்களில் தேங்கி நின்று மண்ணின் அடிப்பகுதிக்கு சென்றடைகிறது.

<u>மழைநீர் சேகரிப்பு திறன்</u>

பயிர் அறுவடை செய்த பின்னர் பயிரின் தாள்கள் நிலத்தில் தேங்கி விடுகிறது. இது பெரும்பாலான பூச்சிகளுக்கு உணவாகவும், நல்ல தங்குமிடமாகவும், முட்டைகள் இட்டு பாதுகாக்கும் இடமாகவும் இருக்கிறது. அதனால், கோடை உழவு செய்தால் களை செடிகள் மற்றும் அறுவடை செய்யப்பட்ட தாள்கள் அழிக்கப்பட்டு மக்கி பயிருக்கு உரமாகிறது. கோடை உழவினால் களைகள், விதைகள் உற்பத்தி தடுக்கப்பட்டு களைகளின் தொந்தரவு குறைக்கப்படுகிறது. பூச்சிகளின் முட்டைகளும், கூண்டுப் புழுக்களும் அழிக்கப்படுகின்றன.

உழவு செய்யும்போது பறவைகள் அதிகமாக வந்து, உழவின்போது வெளியே வரும் புழு மற்றும் முட்டைகளை உணவாக உட்கொள்கின்றன. இதனால், பூச்சிகளின் தாக்கம் குறைகிறது. களைகளின் விதைகள் கோடை உழவின்போது மண்ணுலகுக்கு மேலே வந்து சூரிய வெப்பத்தால் அழிந்து விடுகிறது. தாவர கழிவுகளின் மட்கும் தன்மை அதிகரித்து மண் வளம் பெருகுகிறது. நீண்ட காலக் களைகள் கோடை உழவினால் அழிக்கப்படுகிறது. மழை நீர் சிறிதும் வீணாகாமல் பயிருக்கு கிடைக்க ஏதுவாக இருக்கிறது இதனால், மழைநீர் சேகரிப்புத் திறன் அதிகரிக்கிறது. எனவே, கோடையில் பெய்யும் மழை நீரைக் கொண்டு கோடை உழவு செய்து நிலத்தை பண்படுத்தி மானாவாரி சாகுபடிக்கு தயாராகலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்து உள்ளார்.

**விவசாய நிலம் அழிப்பு உள்ளிட்ட காரணங்களால் கூடலூரில் காய்கறிகளின் விலை கிடுகிடு உயர்வு**

கூடலூர்,

கூடலூரில் விவசாய நிலம் அழிப்பு, வறட்சி உள்ளிட்ட காரணங்களால் காய்கறிகளின் விலை கிடுகிடு என உயர்ந்து உள்ளது.

<u>விவசாய நிலம் அழிப்பு</u>

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காபி பிரதான விவசாயம் நடைபெற்று வருகிறது. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, நடுவட்டம் பகுதியில் தேயிலையுடன் மலைப்பிரதேச காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. கூடலூர் பகுதியில் பீன்ஸ், முள்ளங்கி, ஏலக்காய், கிராம்பு, குறுமிளகு, இஞ்சி உள்பட சில மலைப்பிரதேச காய்கறிகளும், பாகற்காய், புடலங்காய், மிளகாய், நெல்,

வாழை, மரவள்ளி மற்றும் சேனை, கருணை கிழங்குகள் உள்பட சமவெளி பிரதேச பயிர்களும் விளைவிக்கப்படு கின்றன.

தக்காளி, சின்ன வெங்காயம், பூசணிக்காய், உருளைக்கிழங்கு, வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறிகள் கோவை, குண்டல் பேட் பகுதியில் இருந்து பெருமளவு கொள்முதல் செய்யப்பட்டு கூடலூரில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் காய்கறிகளின் விலை சற்று கணிசமாக குறைந்து இருந்தது. இந்த நிலையில் கூடலூர் பகுதியில் விவசாய நிலங்கள் பெருமளவு அழிக்கப்பட்டு வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இதற்கு ஏற்ப போதிய மழை பெய்யாமல் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் கூடலூர் பகுதியில் விவசாயம் பெருமளவு அழிக்கப்பட்டு விட்டன.

இதன் எதிரொலியாக உள்ளூர் மக்களின் தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் காய்கறிகள் உற்பத்தி குறைந்து விட்டது. வழக்கமாக லாரி ஸ்டிரைக் உள்ளிட்ட பிரச்சினைகள் எழும் போது கூடலூரில் மட்டும் சில நாட்களுக்கு தாக்கு பிடிக்கும் அளவுக்கு காய்கறிகளின் விலை உயராமல் இருக்கும். ஏனெனில் உள்ளூர் விளைச் சலை கொண்டு தேவையை எளிதில் பூர்த்தி செய்ய முடிந்தது.

ஆனால் தற்போது நிலைமையோ தலைகீழாக மாறி விட்டது. உள்ளூர் விளைச்சல் அடியோடு குறைந்து விட்டது. இதனை தடுக்க கூடலூர் நகரசபை கூட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு விவசாய நிலங்களில் கட்டிடம் கட்ட தடை விதிக்கப்பட்டது. ஆனால் அந்த தீர்மானத்தையும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மீறி வருகின்றனர். இதனால் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு வீட்டுமனைகளாக மாறி வருகிறது.

<u>காய்கறிகளின் விலை உயர்வு</u>

இந்த நிலையில் கூடலூரில் காய்கறிகளின் விலை கிடு கிடு என உயர்ந்து உள்ளது. காய்கறிகளின் விலை விவரம்:– (கிலோவுக்கு)– சின்ன வெங்காயம்– 60, தக்காளி–36, கேரட்–60, வெண்டைக்காய்–60, பீன்ஸ்–100, கத்தரிக்காய்–30, புடலங் காய்–32, உருளைக்கிழங்கு–40, பச்சை மிளகாய்–80 என உள்ளது. வறட்சி, விவசாய நிலங்கள் அழிப்பு உள்ளிட்ட காரணங்களால் விளைச்சல் இல்லை. இதனால் காய்கறிகளின் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் அவரைக்காய் வரத்து அடியோடு இல்லை எனவும் காய்கறி வியாபாரிகள் கூறி உள்ளனர்.

**தூத்துக்குடி மார்க்கெட்டில் மல்லி விலை தொடர்ந்து அதிகரிப்பு**

தூத்துக்குடி மார்க்கெட்டில் மல்லி விலை தொடர்ந்து அதிகரித்துள்ளது.

<u>விலை அதிகரிப்பு</u>

தூத்துக்குடி மார்க்கெட்டில் மல்லி, வெங்காயம், கம்பரிசி விலை அதிகரித்து உள்ளது. பாசிப்பருப்பு, பட்டாணி பருப்பு, வத்தல் விலை குறைந்து உள்ளது. கடந்த வாரம் ரூ.5 ஆயிரத்து 500–க்கு விற்பனையான உடைசல் மல்லி ரூ.6 ஆயிரமாகவும், ரூ.7 ஆயிரத்துக்கு 200–க்கு

விற்கப்பட்ட உருட்டு மல்லி ரூ.8 ஆயிரமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. தொடர்ந்து மல்லி விலை உயர்ந்து வருகிறது.

ரூ.5 ஆயிரத்துக்கு விற்ற சிறிய வெங்காயம் ரூ.5 ஆயிரத்து 500 ஆகவும், ரூ.1,550–க்கு விற்பனையான கம்பரிசி ரூ.1,700 ஆகவும், ரூ.2 ஆயிரத்து 600–க்கு விற்பனையான தீட்டிய கேப்பை ரூ.2 ஆயிரத்து 700 ஆகவும் விலை உயர்ந்து விற்பனையானது.

<u>பாசிப்பருப்பு</u>

ரூ.7 ஆயிரத்துக்கு விற்பனையான பாசிப்பருப்பு ரூ.6 ஆயிரத்து 800 ஆகவும், ரூ.3 ஆயிரத்து 500–க்கு விற்ற ஆஸ்திரேலியா பட்டாணி பருப்பு ரூ.3 ஆயிரத்து 400 ஆகவும், ரூ.7 ஆயிரத்து 200–க்கு விற்கப்பட்டபனையான வத்தல் ரூ.7 ஆயிரமாகவும், ரூ.2 ஆயிரத்து 500–க்கு விற்பனையான வெள்ளை தினை ரூ.2 ஆயிரத்து 200 ஆகவும் விலை குறைந்து விற்பனையானது.

கடந்த வாரம் பல்லாரி ரூ.1,500 ஆகவும், துவரம் பருப்பு 1–வது ரகம் ரூ.7 ஆயிரத்து 500 ஆகவும், 2–வது ரகம் ரூ.6 ஆயிரத்து 300 ஆகவும், தொலிப் பருப்பு ரூ.4 ஆயிரத்து 600 ஆகவும், உளுந்து ரூ.4 ஆயிரமாகவும், குத்துப்பருப்பு (தொலிநீக்கியது) ரூ.4 ஆயிரத்து 800 ஆகவும் விற்பனையானது.